விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 070 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 15 செவ்வாய்க்கிழமை (27.02.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## பாரிய தடியால் அடித்து குடும்பஸ்தர் கொலை

### கிளிநொச்சி கல்லாறில் சம்பவம்

(கிளிநொச்சி)

பாரிய தடியால் தலை மற்றும் முகப்பகுதியில் தாக்கப்பட்டு குடும்பஸ்தர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாற்றுப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த நடராசா 15

## பொலிஸ்மா அதிபராக

### தென்னகோன் நியமனம்




15

## விசக்கடிக்கு இலக்கான இளைஞன் உயிரிழப்பு

### ஆவரங்கால் கிழக்கில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

விசக்கடிக்கு இலக்காகி மூச்சுவிட சிரமப்பட்ட இளைஞன் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார். 15



# சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

## கையொப்பம் திரட்டும் நடவடிக்கையை ஆரம்பித்த எதிர்க்கட்சிகள்

*(கொழும்பு)*

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுத்துள்ளது.

அந்தப் பிரேரணையில் கையொப்பம் திரட்டும் நடவடிக்கை நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)




## கடும் வெப்பம் மரணம் ஏற்படலாம்

### சுகாதாரத் தரப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

கடும் வெப்பம் காரணமாக மரணம் 15

## சுகாதார பரிசோதகர் சுட்டுக்கொலை

(கொழும்பு)

பொதுச் சுகாதார பரிசோதகர் ஒருவர் நேற்று அதிகாலை எல்பிட்டிய, பத்திராஜவத்தை பகுதியில் 15

## மக்களை தொடர்ந்து ஏமாற்றினால் ரணிலின் ஆட்டத்தை அடக்குவோம்

### ஜே.வி.பி தலைவர் அநுர



(கண்டி)

மக்களைத் தொடர்ந்து ஏமாற்றினால் ஜனாதிபதி ரணிலின் ஆட்டத்தை அடக்குவோம் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் மாநாட்டில் 15

## பெரமுனவில் போட்டியிடுவதா? ஜனாதிபதி ரணிலே முதலில் தீர்மானிக்க வேண்டும்

### மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எமது கட்சியின் உறுப்பினரல்ல, எமது கட்சியில் போட்டியிடுவதா?, இல்லையா? என்பதை அவர் முதலில் தீர்மானிக்க வேண்டும்.

பஷில் ராஜபக்ஷ 16


தன நிதானய
ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
1426 ஆவது சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூபாய்
பதின்மூன்று கோடியே
எழுபத்தொரு இலட்சம்
ராஜாங்கனயவுக்கு
வெற்றி லொத்தர் சீட்டை
விற்பனை செய்தவர்
திரு. W.A. அபேசேகர
வெற்றியாளர் உங்களுக்கு
எங்கள் வாழ்த்துக்கள் !
அடுத்த வெற்றியாளர்
நீங்களா ?
(C-2245)

நடுவு நிலை தவறாது நன்மை காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாராட்டி

## வாழ்த்துகின்றோம்















அன்னதானப் பணி, ஆன்மீகப் பணி, கல்விப் பணி, சமூகப் பணி என பன்முகப் பணிகளை சந்நிதி வேற் பெருமானின் கட்டளையாகவே ஏற்று தனிப் பெரும் ஆளுமையுடன் செயற்படுத்தி வரும்

## கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமி

அவர்களின்

ஆன்மீகப் பணியை கௌரவிக்கும் வகையில் கடந்த 25.02.2024 அன்று கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் வைத்து **இந்தியா - தமிழ்நாடு ABJ அறக்கட்டளையினரால்** (ABJ VIP Global - 2024) "**சிறந்த ஆன்மீகவாதி**" எனும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

சுவாமிகளின் பணி பல்லாண்டு தொடர
சந்நிதி வேற் பெருமானின் அருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.

**சைவ கலை பண்பாட்டு பேரவை**
**சந்நிதியான் ஆச்சிரமம்**
**தொண்டைமானாறு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் பொலிஸ் பதிவு!

## பொலிஸ் தலைமையகம் அறிவிப்பு

(கொழும்பு)

**நாடளாவிய ரீதியாக சகல பிரஜைகளினதும் தகவல்களை சேகரிக்கும் புதிய வேலைத்திட்ட மொன்றை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.**

நாட்டில் இடம்பெறுகின்ற குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்களை இலகுவில் அடையாளம் காணும் நோக்கில் இந்த புதிய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு நபர் மற்றும் குடும்பங்களின் தகவல்கள் வசிக்கும் இடம், தேசிய அடையாள அட்டை எண், கிராம அலுவலர் பிரிவு போன்ற தகவல்களை உள்ளடக்கிய படிவத்தை பூர்த்தி செய்து தமது வசிப்பிடத்துக்கு உரிய பொலிஸ் நிலையத்தில் கையளிக்க அறிவுறுத்தப்படவுள்ளனர்.

குறிப்பாக யாரேனும் ஒருவர் தற்போதைய வசிப்பிடத்துக்கு உரிய பொலிஸ் பிரிவை விட்டு வேறொரு பொலிஸ் பிரிவுக்கு உரிய பிரதேசத்துக்கு வசிப்பிடத்தை மாற்றும் சந்தர்ப்பத்தில், அது தொடர்பாக கிராம சேவை அதிகாரியின் பரிந்துரையுடன் பொலிஸ் நிலையத்துக்கு கட்டாயம் தகவல் தெரிவிக்க வேண்டும் என பொது மக்களை வலியுறுத்தவும் பொலிஸார் தீர்மானித்துள்ளனர். (நி-5-6)

## 'Talk to me'

## இலவச ஆங்கில மொழிமூல சிறுவர்களுக்கான பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

கந்தையா உபாத்தியார் வீதி, கந்தரோடையில் இயங்கி வரும் 'Boundless Futures' பிறைவெட் லிமிட்டட் நிறுவனம் 'Talk to me' என்னும் சிறுவர்களுக்கான இலவச ஆங்கில வாய்மொழி மூலமான செயற்றிட்டத்தை நடத்தவுள்ளது. பயிற்சிநெறிக்கான பதிவுகள் இன்றிலிருந்து மார்ச் 3 ஆம் திகதி வரை நடைபெறும். எதிர்வரும் மார்ச் மாதம் 9 ஆம் திகதி குறித்த வகுப்புகள் ஆரம்பமாகும். வார நாட்களிலும் வார இறுதி நாட்களிலும் நடைபெறவுள்ள இப்பயிற்சிநெறிக்கான தகவல்கள் குறித்து அறிந்து கொள்ள 070 232 7827 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். (நி-5-6)

## தமிழக மீனவர்களின் போராட்டம் நிறைவு

(சென்னை)

இராமேஸ்வரம் மீனவர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் வாபஸ் பெற்ற நிலையில் பத்து நாட்களுக்கு பின் மீனவர்கள் மீன்பிடிக்க சென்றுள்ளதாக தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, இலங்கையில் சிறை வைக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி இராமேஸ்வரம் மீனவர்கள் கட ந்த 10 நாட்களாக தொடர் வேலை நிறுத்தப் போராட்டம் மற்றும் சாகும் வரை உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில் குறித்த வேலை நிறுத்த போராட்டத்தை வாபஸ் பெற்ற இராமேஸ்வரம் மீனவர்கள் மீண்டும் கடற்றொழில் நடவடிக்கையை ஆரம்பித்தனர்.


இதனால் 10 நாட்களாக வெறிச்சோடி காணப்பட்ட மீன்பிடி துறைமுகம் நேற்று மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளது.

இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை மீனவர்களின் உண்ணாவிரத போராட்ட பகுதிக்கு வருகை தந்த இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் மீனவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி தருவதாக உறுதி அளித்ததுடன், விரைவில் தமிழக முதல்வரை மீனவர்கள் சந்திக்க ஏற்பாடு செய்து தருவதாக வாக்குறுதி அளித்ததன் பேரில் மீனவர்கள் தங்களது உண்ணாவிரத போராட்டம் மற்றும் தொடர் வேலை நிறுத்த போராட்டத்தை தற்காலிகமாக வாபஸ் பெற்றனர்.

இதனையடுத்து வேலை நிறுத்த போராட்டத்தை வாபஸ் பெற்று இராமேஸ்வரம் மீனவர்கள் சுமார் 300இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து மீன்பிடி அனுமதிச்சீட்டு பெற்று கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## மீனவர் விவகாரம்

## மனிதாபிமான அடிப்படையில் அணுகுமாறு இந்தியா கோரிக்கை



(கொழும்பு)

கடற்றொழிலாளர் பிரச்சினையை மனிதாபிமான அடிப்படையில் அணுகுமாறு இலங்கையிடம் இந்தியா வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கை கடற்றொழில்அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவுக்கும் இடையில் விசேட சந்திப்பு இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

இதன்போது கடற்றொழிலாளர் பிரச்சினை தொடர்பில் இந்தியா- இலங்கை இடையேயான ஆக்கபூர்வமான அணுகுமுறைகளை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

இரு தரப்பு கடற்றொழிலாளர்களின் நலன்சார்ந்து மனிதாபிமான முறையில் கடற்றொழிலாளர் பிரச்சினையை அணுகுமாறு இந்தியத் தூதுவர் இதன் போது வலியுறுத்தினார்.

மேலும் வடக்கு மாகாணத்தில் இந்தியாவால் முன்னெடுக்கப்படுகின்ற செயற்றிட்டங்கள் தொடர்பில் இந்தச்சந்திப்பின் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (நி-5-6)

## ரூபாவின் பெறுமதி உயர்வு

(கொழும்பு)

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 3.9 வீதத்தால் அதிகரித்துள்ளது.

மத்திய வங்கி வெளியிட்டுள்ள வாராந்த அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள் ளது.

குறித்த காலப்பகுதியில் இலங்கை ரூபாவின் பெறுமதி ஸ்ரேலிங் பவுண்ட்ஸ்க்கு நிகராக 4.8 சதவீத மும் யூரோவுக்கு நிகராக 6.4 சதவீதமும் இந்திய ரூபாவுக்கு நிகராக 3.7 சதவீதமும் உயர்ந்துள்ளது. (நி-5-6)

## இலங்கைக்கான அமெரிக்காவின் புதியதூதுவராக எலிசபெத் கெத்ரின் ஹோர்ஸ்ட் நியமனம்

(கொழும்பு)

இலங்கைக்கான அமெரிக்காவின் புதிய தூதுவராக எலிசபெத் கெத்ரின் ஹோர்ஸ்ட் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவராக பணியாற்றிய ஜூலி சங்கின் பதவிக்காலம் விரைவில் நிறைவடையவுள்ள நிலையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி சிரேஷ்ட அமெரிக்க ராஜதந்திரியான எலிசபெத் கெத்ரின் ஹோஸ்ட், பாகிஸ்தானுக்கு பொறுப்பான தலைமை பிரதி செயலாளராக பதவி வகித்து வருகின்ற நிலையிலேயே இந்த புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. மேலும் அமெரிக்க செனட் சபையின் அனுமதிக்கிணங்க இலங்கை



அரசாங்கம் இதற்கான ஒப்புதல் வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

## தே.அ.அட்டையுடன் TIN இலக்கமும் வழங்கப்படும்

### நிதி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

தேசிய அடையாள அட்டையுடன் வழங்குவதுடன் TIN இலக்கமும் வழங்க ப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைப் பத்திரத்தை வெளியிடுவதன் மூலம் இந்த வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு எதிர்பார்ப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். இதன்படி, புதிய தேசிய அடையாள அட்டைகளை வழங்கும்போது 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு TIN இலக்கம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (நி-5-6)

## 'எட்கா' ஒப்பந்தத்தால் இலங்கை அழிவடையும்

### விமல் வீரவன்ச அபாய அறிவித்தல்



(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதம் இந்தி யாவுடன் 'எட்கா ஒப்பந்தம்' கைச்சாத்திடப்படவுள்ளது. இந்த நிலையில் எட்கா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் எந்தவொரு இந்தியனும் சுதந்திரமாக வேலைக்காகவும் வர்த்தகத்திற்காகவும் இலங்கைக்கு வர முடியும்.

எனவே சில காலத்திற்குப் பிறகு இலங்கை இந்தியர்களால் நிரம்புவதும் இலங்கையர்கள் நாட்டில் சிறுபான்மையினராக மாறுவதும் தவிர்க்க முடியாதது என பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இலங்கையின் தலைவிதி என்ற தொனிப்பொருளில் கடுவெல கொஸ்வத்தையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே விமல் வீரவன்ச இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர் அவ்வாறான ஒரு நிலை ஏற்படின் அன்றிலிருந்து இலங்கை இறையாண்மையை இழக்கும் என்றும் நாடு பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைந்துள்ள இத்தருணத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் இறையாண்மையை பலி கொடுத்து வருவதாகவும் குறிப்பிட்டார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்ரம்–ராஜன்– கங்கு வெற்றிக்கிண்ணம்

## 2 ஆவது தகுதி காண் போட்டியில் கிறாஸ் கொப்பர்ஸ் வெற்றி



விக்ரம் - ராஜன் - கங்கு வெற்றிக் கிண்ண 2 ஆவது தகுதி காண் போட்டி யில் கிறாஸ் கொப்பர்ஸ் அணி யாழ்.பல்கலைக் கழக அணியை 77 ஓட்டங்களால் வெற்றி பெற்று தமது முதலாவது வெற்றியை பதிவு செய்தது.

கடந்த 23ஆம் திகதி வெள்ளிக் கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத் தில் குறித்த போட்டி இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கிறாஸ் கொப்பர்ஸ் அணி 30 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 270 ஓட்டங்களை பெற்றது.

அஜித்-80, ஜனன்தன்-51, அஜீபன்-42 ஓட்டங்களை பெற்றனர்.

யாழ்.பல்கலைக்கழக அணி சார்பாக யதூஸன் 51 ஓட்டங்களை கொடுத்து 15 இலக்குகளையும் தயுஸ்ரன் 17 ஓட்டங்க ளை கொடுத்து 2 இலக்குகளையும் கைப் பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ். பல்கலைக்கழக அணி 28.2 ஓவர்களில் 10 இலக்குகளை இழந்து 193 ஓட்டங்களை பெற்றது.

றொகாத்தன்-35, குசல்றோடா-25 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கிறாஸ் கொப்பர்ஸ் அணி சார்பாக சுஜீபன்22 ஓட்டங்களை கொடுத்து 4 இலக்குகளையும் மாதுஸன் 33 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும் கைப் பற்றினர்.

இப்போட்டியின் சிறந்த வீரராக கிறாஸ் கொப்பர்ஸ் அணியை சார்ந்த அஜித் தெரிவு செய்யப்பட்டார். (நி-5-6)



அஜித் (சிறந்த வீரர்)

# ஐயனார் அணியை வீழ்த்தி விண்மீன் சூப்பர் லீக்கிற்கு தகுதி



(யாழ்ப்பாணம்)

யாழின் நாயகன் உதைபந்தாட்ட தொடரில் விண்மீன் அணி சூப்பர் 12 லீக்கிற்கு தகுதி பெற்றுள்ளனர்.

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழின் நாயகன் உதைபந்தாட்ட தொடர் நாமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் விண் மீன் அணியை எதிர்த்து ஐயனார் அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய விண்மீன் அணி ஆட்ட நேர முடிவில் 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சூப்பர் லீக்கிற்கு தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-90)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

# கலைவாணி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட போட்டி

## வெற்றியை தனதாக்கியது பாடும்மீன் அணி



யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அமரர் நடராசா சிறிஸ்கந்தராசா ஞாபகார்த்தமாக கலைவாணி விளையாட்டுக் கழகம் நடத்தும் 9 பேர் கொண்ட நாற்பது வயது பிரிவினருக்கான போட்டி கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

போட்டியில் பொற்பதி அணியை எதிர்கொண்ட பாடும் மீன் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (நி-106)

சிவமயம்
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
நயினாதீவு

நாளாந்த உடை தேங்காய் ஏல விற்பனை

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலின் உயர்திருவிழாக் காலம் தவிர்ந்த ஏனைய நாட்களில் ஆலயத்தில் உடைக்கப்படுகின்ற உடை தேங்காய்கள் 2024.03.02ஆம் திகதி காலை 10.00 மணியளவில் பகிரங்க ஏலத்தில் விடப்படவுள்ளது. எனவே ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம்.

நிபந்தனைகள்:
1. தாங்களே உடை தேங்காய்களை உரிய இடத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டும்.
2. ஏலத்தின் மூலம் தெரிவு செய்யப்படுபவர் மொத்தத் தொகையில் 1/3 வீதத்தினை அன்றைய தினமே செலுத்த வேண்டும்.
3. ஏலமானது உயர்திருவிழாக் காலம் தவிர்ந்ததாக அமையும்.

திரு.ந.மோகனரூபன்
செயலாளர்,
அறங்காவலர் சபை
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு.
(C-8421)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் கால் பதிக்கும் புதிய எரிபொருள் நிறுவனம்

(கொழும்பு)

இலங்கையின் எரி பொருள் சந்தையின் போட்டி த்தன்மையை அதிகரிக்கும் வகையில் மற்றுமொரு வெளிநாட்டு நிறுவனம் இலங்கை சந்தையில் காலடி வைத்துள்ளது.

அவுஸ்திரேலியாவின் "யுனைடெட் பெற்றோலியம்" நிறுவனமே இலங்கையில் எரி பொருள் விற்பனையை ஆரம்பிக்க உள்ளதாக தெரி விக்கப்படுகின்றது.

இது தொடர்பில் அந்த நிறுவனத்துக்கும் மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சு க்கும் இடையே கடந்த 22 ஆம் திகதி ஒப்பந்தம் கையெழுத்தாகியு ள்ளது.

நாட்டில் தற்போது இயங்கி வரும் 150 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் அந்த நிறுவன த்துக்கு மாற்றப்படவுள்ள துடன் மேலும் 50 எரி பொருள் நிரப்பு நிலையங்கள் புதிதாக நிறுவப்பட உள்ளன.

இலங்கையில் எரிபொருள் விநியோக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக "யுனை டெட் பெற்றோலியம் லங்கா லிமிட்டெட்" என்ற நிறுவ னத்தை பதிவு செய்துள்ள தாக தகவல் வெளியாகி உள் ளது. (நி-5-6)

# பாராளுமன்றத்தின் சுயாதீனத்தன்மை கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது

## ஜீ.எல்.பீரிஸ்

(கொழும்பு)

இணையவழிப் பாதுகாப்புச் சட்டத்தை சபாநாயகர் அமுல்படுத்தியதன் மூலம் பாராளுமன்றத்தின் சுயாதீனத்தன்மை கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளதாக பாரா ளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர் தனவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நேற்று கொழும்பில் கையெழு த்திடப்பட்டது. இதன்பின்னர் ஊடகங்களு க்குக் கரு த்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இவ்விடயம் தொட ர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பாராளுமன்றத்தின் சுயாதீனத் தன்மை 93 ஆண்டுகளாக பேணிப் பாது காக்கப்பட்டது. ஆனால் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன அதனை மீறி யுள்ளார்.

அண்மையில் இந்த நாட்டில் நிறை வேற்றப்பட்ட சட்டங்களில் இணையவழி பாதுகாப்பு சட்டம் மிகவும் பயங்கரமான ஒன்றாகவே கருதப்படுகின்றது.

மக்களின் கருத்து சுதந்திரம் மற்றும் தகவல் அறியும் உரிமை என்பன இந்த சட்ட நடைமுறையின் பின்னர் கேள்விக்கு றியாகின்றது. இந்த சட்டத்தை அமுல்ப டுத்திய விதம் தொடர்பாக சபாநாயகரின் நடவடிக்கையை நாம் வன்மையாக கண்டி க்கின்றோம். இந்த சட்டம் திருத்தப்பட வேண்டும் என உயர்நீதிமன்றம் அறிவித் திருந்தது.

இணையவழி பாதுகாப்பு சட்டத்தை நடைமுறைப்படு த்தப்பட வேண்டு மாயின் திருத்தம் மேற் கொள்ள வேண் டிய 13 பரிந்துரைகளை உயர் நீதிமன் றம் முன் வைத் திரு ந்தது.

அதன் பின்னர் 3 இல் 2 பெரும் பான்மையுடனேயே பாராளுமன் றில் நிறைவேற்ற முடி யும் என்றும் உயர் நீதிமன்றம் அறி வித்திருந்தது.

இந்த பரிந்து ரைகள் எவையும் முழுமையாக செவி சாய்க்காமல் சபா நாயகர் அதனை மீறி சட்டத்தினை நடைமுறைப் படு த்தியுள்ளார்" என ஜீ . எல் . பீரிஸ் மேலும் குறிப்பிட் டார். (நி-5-6)


**புலோப்பளை அறத்தி அம்பாள் ஆலய பரிபாலன சபை வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபை தெரிவுக்குமான அழைப்பிதழ் -2024.03.12**

மேற்படி கூட்டம் 12.03.2024 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணிக்கு ஆலய முன்றலில் ஆலய பரிபாலனசபைத் தலைவர் திரு.வை.சற்குணம் அவர்கள் தலைமையில் கூட்டம் இடம்பெற இருப்ப தனால் அடியார்கள், விழா உபயகாரர்கள், தொண்டர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின் றோம்.

(27.02.2024) (சி-8417)

செயலாளர்
புலோப்பளை அறத்தி அம்பாள்
ஆலயப் பரிபாலனசபை, புலோப்பளை.

CJ PROMOTERS & ரேனுகா பந்தல் நடாத்தும்

CARNIVAL



(18953)

சாவகச்சேரி மீன் சந்தை முன்னால், அனைவரின் வேண்டுகோளுக்கும் இணங்க March 3 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

தொடர்புகளுக்கு:
077 254 6511, 077 500 2840

CJ Promoters நிறுவனத்திற்கு வேலைக்கு ஆட்கள் தேவை.

1. Event manager
2. Project Coordinator
3. Field Workers
4. உதவியாளர் (கல்வி தகுதி தேவை இல்லை)

மாலை 4 மணி முதல் 11 மணிவரை வேலை செய்யக் கூடியவர்கள்

மேலதிக விபரங்களுக்கு 078 888 8585 (9284)


# இராசிபலன்

27.02.2024
மாசி 15, செவ்வாய்க்கிழமை
திருதியை பின்னிரவு 12.43 மணிவரை

அத்தம் பின்னிரவு 6.23 மணிவரை
சுபநேரம் -10.59-12.29 மணிவரை
இராகுகாலம்-3.29-4.59 மணிவரை

சந்திராஷ்டமம்
சதயம்.

வளவன்

**மேஷம்** நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், குடும்ப மகிழ்ச்சி கூடும்.

**கடகம்** பொது நல ஈடுபாட்டில் புகழ் பெறுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், சகோதர வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**துலாம்** ஒரு சில வேலைகளுக்காக சற்று அலைய நேரிடலாம், புண்ணிய காரியங்களுக்கு சிறிது செலவு செய்து மகிழ்வீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்.

**மகரம்** மருத்துவச் செலவுகள் குறைந்து மன நிம்மதியைக் கொடுக்கும், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**ரிஷபம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், வழிபாட்டால் நிம்மதி காண வேண்டிய நாள், எதிர்கால நலனில் அக்கறை கூடும்.

**சிம்மம்** குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வாக்கு மேன்மையுண்டு.

**விருச்சிகம்** தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், சகோதர ஒற்றுமை பலப்படும், விருந்தினர் வருகையுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**கும்பம்** மற்றவர்களிடம் பேசும் போது நிதானம் தேவை, மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், விரயங்கள் கூடும் பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள்.

**மிதுனம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கன்னி** பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், குடும்பத்தில் ஏற்பட்ட முரண்பாடுகள் அகலும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**தனுசு** வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், கட்டிடப் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்** விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும்.

**வேதனையை பொறுத்துக் கொள்பவனே வெற்றி பெறுகிறான்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் சிறந்த 10 பாடசாலைகளில் மூன்று பாடசாலைகள் வடக்கைச் சேர்ந்தவை

(யாழ்ப்பாணம்)

நாட்டின் சிறந்த 10 பாடசாலைகளில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த மூன்று பாடசாலைகள் இடம்பிடித்துள்ளன.

யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப்பாடசாலை, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மற்றும் வவுனியா தமிழ் மகாவித்தியாலயம் ஆகியவையே இவ்வாறு சிறந்த பாடசாலைகளாக இடம்பிடித்துள்ளன.

இதன் மூலமாக பாடசாலையின் அதிபராக பணியாற்றுவோர் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு சமனான இலங்கை கல்வி நிர்வாக சேவை-தரம்1 ஐ சேர்ந்தவராக இருப்பதுடன் பிரதி அதிபர்களாக இருவர் கடமையாற்றுவர். இவர்கள் இலங்கை கல்வி நிர்வாக சேவை-தரம் 3 ஐ சேர்ந்தவர்களாக இருப்பர்.(நி-5-6)

# மீனவரின் வலையில் சிக்கிய அதிக எடை கொண்ட சுறா



(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு உடுத்துறை 10 ஆம் வட்டாரத்தை சேர்ந்த மீனவர் ஒருவரின் வலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பாரிய சுறா மீன் ஒன்று பிடிபட்டுள்ளது.

குறித்த சுறா மீனுடைய மொத்த நிறை 3700 கிலோ எனவும் நீண்ட காலத்திற்கு பிறகு வடமராட்சி கிழக்கில் அகப்பட்ட அதிகளவான நிறை உடைய சுறாமீன் இதுவாக உள்ளதாகவும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

சுறா மீன் பிடிக்கப்பட்டுள்ள தகவல் அறிந்ததையடுத்து அதிகளவான பொதுமக்கள் உடுத்துறை கடற்கரையில் கூடியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(நி-5-6-33-60)

# மத்திய வங்கி ஆளுநர் யாழ்.பல்கலைக்கு விஜயம்



(யாழ்ப்பாணம்)

மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் யாழ். பல்கலைக்கழகத்துக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டனர்.

யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜாவை அவரது அலுவலகத்தில் வைத்துச் சந்தித்து சமகால விவகாரங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் குழுவினர் பல்கலைக்கழகத்தின் பீடாதிபதிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், அலுவலர்கள் மற்றும் மாணவர்களுடன் அரசாங்கத்தின் தற்போதைய பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் நெருக்கடிகள் தொடர்பிலும் விளக்கமளித்ததோடு இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டவர்களின் கேள்விகளுக்கும் மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க பதிலளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-33)




# உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் தெல்லிப்பளை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழின் நாயகன் உதைபந்தாட்ட தொடர் குறித்த கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இளவாலை சென்லூட்ஸ்அணியை எதிர்த்து யாழ் ஜக்கியம் அணியும் பிற்பகல் 4.45 மணிக்கு உடுப்பிட்டி நவஜீ வன்ஸ் அணியை எதிர்த்து காரைநகர் தோப் புக்காடு அணியும் மோதவுள்ளன. (நி-5-6-90)

# மின்கசிவால் தீப்பற்றிய வாகனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரின் மத்திய பகுதியில் வாகன மொன்று தீக்கிரையாகியுள்ளது. நேற்று மத்திய பேருந்து நிலைய த்திற்கும் ஸ்ரான்லி வீதிக்கும் இடையில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த வாகனமே தீப்பற்றி எரிந்தது. சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த யாழ். மாநகரசபையின் தீயணைப்பு படையினர் தீப்பரவலை கட்டுப்ப டுத்தினர். வாகனத்தில் ஏற்பட்ட மின்கசிவே



தீப்பரவலுக்கு காரணம் என தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-5-6-33)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 200 | 400 | 200 |
| உருளைக்கிழங்கு | 150 | 150 | 140 | 120 | 150 |
| பச்சைமிளகாய் | 500 | 550 | 550 | 450 | 500 |
| தக்காளி | 500 | 600 | 500 | 500 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 130 | 130 | 140 | 150 |
| கோவா | 300 | 450 | 450 | 350 | 500 |
| கரட் | 600 | 550 | 550 | 500 | 600 |
| பூசணி | 200 | 240 | 240 | 170 | 300 |
| புடோல் | 150 | 160 | 200 | 145 | 250 |
| வாழைக்காய் | 200 | 250 | 200 | 160 | 250 |
| சின்ன வெங்காயம் | 250 | 240 | 300 | 200 | 250 |
| பெரிய வெங்காயம் | 400 | 350 | 350 | 300 | 450 |
| பாகற்காய் | 350 | 400 | 400 | 415 | 400 |
| வெண்டக்காய் | 350 | 250 | 280 | 245 | 500 |
| கருணைக் கிழங்கு | 160 | 120 | 120 | 140 | 150 |
| பயற்றங்காய் | 250 | 250 | 300 | 400 | 400 |
| லீக்ஸ் | 300 | 400 | 450 | 350 | 500 |
| பீற்றூட் | 300 | 300 | 400 | 400 | 400 |
| கறிமிளகாய் | 600 | 650 | 500 | 400 | 800 |
| முருங்கைக்காய் | 1400 | 1800 | 1400 | 1200 | 1600 |
| போஞ்சி | 450 | 350 | 400 | 350 | 800 |
| கத்தரிதம்புள்ள | 150 | 150 | 200 | -- | 160 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 50 | 50 | 100 |
| தேசிக்காய் | 150 | 250 | 200 | 100 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 110 | 100 | 50-100 | 70-100 |
| இராசவள்ளி | 320 | 450 | 350 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 150 | 200 | 200 | 135 | 300 |
| முள்ளங்கி | 100 | 100 | 200 | 140 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 80 | 120 | 60 |
| வல்லாரை | 40 | 250 | 50 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 100 | 200 |

# கலாநிதி.மோகன் சுவாமிகளுக்கு ஆன்மிகத்திற்கான சிறந்த விருது



(கரணவாய்)

வடமராட்சி செல்வச்சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகன் சுவாமிகள் அவர்களுக்கு மிகச்சிறந்த ஆன்மிகத்திற்கான விருது தமிழ்நாடு ABJ அறக்கட்டளையால் நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற விருது வழங்கும் விழாவில் வழங்கி கௌரவிக்கப்பட்டது.(நி-5-6-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை தோற்கடிப்போம் - மகிந்த ராஜபக்ஷ சூளுரை



(கொழும்பு)

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை தோற்கடிக்கப்படும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.


இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

பாராளுமன்ற சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன பாராளுமன்றம் மற்றும் அரசியலமைப்பின் நம்பிக்கையை மீறியுள்ளதாக தெரிவித்து ஐக்கிய மக்கள் சக்தியினரால் சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்படவுள்ளது.


சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், லக்ஸ்மன் கிரியெல்ல, ஜி.எல். பீரிஸ், திஸ்ஸ அத்தநாயக்க, சந்திம வீரக்கொடி மற்றும் ஷான் விஜயலால் டி சில்வா ஆகியோர் நேற்று கையெழுத்திட்டுள்ளனர்.

இந்நிலையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நெலும் மாவத்தையிலுள்ள பொதுஜன பெரமுன அலுவலகத்திற்கு சென்றிருந்த நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியினரால் சபாநாயகருக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் ஊடகவியலாளர்கள் மகிந்த ராஜபக்ஷவிடம் கேள்வியெழுப்பியிருந்தனர்.

இதற்கு பதிலளித்த மகிந்த ராஜபக்ஷ, சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்படும் எனவும் தெரிவித்தார். (நி-5-6)



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சியான தமிழ் ஈழ விடுதலை இயக்கத்துக்கும் பிரித்தானிய உயர்ஸ்தானிகருக்கும் இடையிலான சந்திப்பு கடந்த திங்கட்கிழமை கொழும்பில் நடைபெற்றது.




கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் திருவள்ளுவர் குருபூசை தினத்தை முன்னிட்டு நேற்று கலாசாலையின் அதிபர் சந்திர மௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கலாசாலையின் முன்றிலில் உள்ள திருவள்ளுவர் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டதுடன் மலர் வணக்கமும் செலுத்தப்பட்டது. (படம்: சிவசாந்தன்)

# இலங்கை இளநீருக்கு வெளிநாடுகளில் அதிக மவுசு

(கொழும்பு)

ஐக்கிய அரபு இராச்சியம் உட்பட பல நாடுகளில் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் இளநீருக்கு அதிக கேள்வி இருப்பதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் இளநீர் ஒன்றின் விலை இலங்கை ரூபாவின் பெறுமதிக்கு அமைய 2000 ரூபாவாக விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வாரத்திற்கு சுமார் 252, 000 இளநீர்கள் இலங்கையில் இருந்து ஐக்கிய அரபு இராஜ்ஜியத்திற்கு ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-5-6)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3050


கபிலா




வைபவ்




விசால்




விஜி




மிருஷாலி




சாகித்தியன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## டொனால்ட் ட்ரம்பின் பதவிக் காலத்தில் இந்திய-அமெரிக்க உறவு வலுவடைந்திருந்தது

(டில்லி)

டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்காவின் ஜனாதிபதியாக பதவி வகித்த போது இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவு முன்னர் எப்போதும் இல்லாததை விட வலுவாகியதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.


டில்லியில் நடைபெற்ற மோதல், போட்டி, ஒத்துழைப்பு மற்றும் உருவாக்கம் குறித்த மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே எஸ். ஜெய்சங்கர் இதனை தெரிவித்தார்.

அமெரிக்காவுடனான இந்தியாவின் உறவுகள் ட்ரம்ப்பால் மட்டுமல்ல பில்கிளின்டனுக்குப் பின்னர் பதவிக்கு வந்த ஒவ்வொரு அமெரிக்க ஜனாதிபதியாலும் பலப்படுத்தப்பட்டன எனவும் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நவம்பரில் நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ட்ரம்ப் மீண்டும் போட்டியிட உள்ள நிலையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரின் இந்த கருத்து முக்கியத்துவம் பெற்றுள்ளது.

இதனிடையே அமெரிக்காவில் ஏற்கனவே நடந்து வரும் குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரை தீர்மானிக்கும் தேர்தல்களில் ட்ரம்ப் முன்னேறி வருகிறார்.

அண்மையில் அவர் தென் கரோலினாவில் தன்னை எதிர்த்து போட்டியிட்ட நிக்கி ஹாலேவை தோற்கடித்தார்.



இம்முறை ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன் மீண்டும் போட்டியிட உள்ளதுடன் டொனால்ட் ட்ரம்பும் இரண்டாவது முறையாக ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடவுள்ளார்.

ஏற்கனவே வெளியாகியுள்ள சில கருத்துக் கணிப்பு முடிவுகளுக்கு அமைய பைடனை விட ட்ரம்புக்கே அதிக வாய்ப்புகள் இருப்பதாக கூறப்படுகிறது. (ரி-5-6)

## ஆழ்கடலில் மூழ்கி கிருஷ்ணரை வழிபட்ட பிரதமர் மோடி



(டில்லி)

இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி குஜராத்தில் உள்ள துவாரகாதீஷ் கோவிலில் ஆழ்கடலில் மூழ்கி கிருஷ்ணரை பிரார்த்தனை செய்துள்ளார்.

குஜராத்தின் துவாரகா நகரில் துவாரகாதீசர் கோவிலில் பிரதமர் மோடி நேற்று முன்தினம் வழிபாட்டில் ஈடுபட்டார். பின்னர் ஸ்குபா டைவிங் உபகரணங்களுடன் ஆழ்கடலில் மூழ்கி கிருஷ்ணர் கால துவாரகா நகரில் பிரார்த்தனை செய்தார்.

இதுகுறித்து சமூக வலைத்தளத்தில் அவர் வெளியிட்ட பதிவில் "ஆழ்கடலில் மூழ்கியுள்ள துவாரகா நகரத்தில் பிரார்த்தனை செய்தது மிகவும் தெய்வீக அனுபவம் ஆகும். ஆன்மிக மகத்துவம் மற்றும் காலத்தால் அழியாத பண்டைய சகாப்தத்துடன் நான் இணைந்திருப்பதை உணர்ந்தேன். பகவான் கிருஷ்ணர் அனைவரையும் ஆசீர்வதிக்கட்டும் என்று பதிவிட்டுள்ளார்.

ஆழ்கடலில் மூழ்கிய துவாரகாவில் பிரதமர் மோடி பிரார்த்தனை செய்தபோது மயில் இறகுகளை காணிக்கையாக வழங்கினார். ஆழ்கடலில் மூழ்கிய துவாரகா நகரை பார்வையிட குஜராத் அரசு ஏற்பாடு செய்துள்ளது. (ரி-5-6)

## பொருட்கள் ஏற்றிச்சென்ற கப்பலை தடுக்க முயற்சித்த சீனக்கப்பல்

### பிலிப்பைன்ஸ் குற்றச்சாட்டு

(மணிலா)

மீனவர்களுக்கு பொருட்களை எடுத்துச் சென்ற தமது நாட்டு கப்பலை சீனாவின் கடலோர பாதுகாப்பு படையினர் தடுக்க முயற்சித்ததாக பிலிப்பைன்ஸ் அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

நான்கு சீனக் கப்பல்களில் மூன்று கப்பல்கள், பிலிப்பைன்ஸ் கப்பலுக்கு 100 மீற்றர் சுற்றுவட்டாரத்துக்குள் வந்து ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் நகர்ந்து சென்றதாக பிலிப்பைன்ஸ் தெரிவித்துள்ளது.

இந்த சம்பவமானது தென் சீனக்கடலில் சர்ச்சைக்குரிய பகுதியில் இரண்டு வாரங்களில் நடந்துள்ள இரண்டாவது சம்பவமாகும். கடந்த 22 ஆம் திகதி மீனவர்களுக்கு எரிபொருளை விநியோகம் செய்துகொண்டிருந்த பிலிப்பைன்ஸ் கப்பலை, சீனக் கடலோர பாதுகாப்பு படையின் கப்பல் மற்றும் மூன்று சீனக் கப்பல்கள் இடையூறு செய்ததாக பிலிப் பைன்ஸ் கடலோர பாதுகாப்பு படையினர் தெரிவித்துள்ளனர்.

பிலிப்பைன்ஸுக்கு அருகில் அமைந்துள்ள ஸ்கார்பருக் ஷோல் என்ற தீவை சீனா கடந்த 2012 ஆம் ஆண்டு கைப்பற்றியதில் இருந்து இரு நாடுகளுக்கு இடையில் மோதல்கள் நிலவி வருகின்றன.



2012 ஆம் ஆண்டு முதல் சீனா

## சுமார் 60...
## நிறுத்த க...

(சியோல்)

**தென்கொரியாவி...**
**மருத்துவர்கள் ...**
**போராட்டத்தை மு...**
**திரும்புமாறும் அத...**
**நடவடிக்கை எடுக்...**
**எச்சரிக்கை விடுத்...**

இந்நிலையிலேயே போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மருத்துவர்களின் அனுமதிப்பத்திரத்தினை ரத்து செய்யும் நிலை ஏற்படும் என தென்கொரிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

## இஸ்ரேல், அமெ... செங்கடலில்...

(சனா)

செங்கடலில் இஸ்ரேல், அமெரிக்கா மற்றும் பிரித் தானியாவுடன் தொடர்புடைய கப்பல்களுக்கு ஏமனின் ஹவுதி போராளிகள் தடை விதித்துள்ளனர். காசாவில் பாலஸ்தீனியர்களுக்கு ஆதரவு தெரிவித்துள்ள ஹவுதி போராளிகள் தங்கள் இராணுவ பிரசார நடவடிக்கையை வலுப்படுத்தும் முயற்சியாக இதனை அறிவித்துள்ளனர்.

அதன்படி கப்பல் காப்பீட்டாளர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு குறித்த தடை குறித்த முறையான அறிவிப்பை ஹவுதியின் மனிதாபிமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# 6000 மருத்துவர்களின் போராட்டம்;

# ் காலக்கெடு விதித்த தென்கொரிய அரசு

**யாவில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள
கள் பெப்ரவரி மாத முடிவிற்குள்
த முடிவுக்கு கொண்டு வந்து பணிக்கு
ம் அதனை மீறுவோருக்கு எதிராக சட்ட
எடுக்கப்படும் எனவும் அரசாங்கம்
விடுத்துள்ளது.**



ட்
து
த்
ல
ர

ஆனாலும் மருத்துவர்கள் எதனையும் பொருட்படுத்தாது போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

மருத்துவர்களின் போராட்டம் காரணமாக நோயாளிகள் சிரமங்களுக்கு உள்ளாகிவருகின்றனர். அவசர பிரிவினைத் தவிர ஏனைய பிரிவுகள் அனைத்தும் முடங்கிப் போயுள்ளன.

தென்கொரிய அரசாங்கம் மருத்துவ துறையினை விரிவாக்கும் பொருட்டு வைத்திய மாணவர்களின் அனுமதியினை அதிகரிக்க திட்டம் கொண்டிருந்த நிலையில் அதற்கு எதிராக சுமார் 6000 இற்கும் மேற்பட்ட இளம் மருத்துவர்கள் போராடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## அமெரிக்க, பிரித்தானிய கொடிகளுடன்
## யில் கப்பல்கள் செல்வதற்கு தடை

மெ
டன்
ஏம
டை
ஸ்தீ
வித்
கள்
யை
ாக

ளர்
குறி
அறி
ான

செயற்பாட்டு ஒருங்கிணைப்பு நிலையம் அனுப்பியுள்ளது.

இந்த தடை தனியார் அல்லது பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள், இஸ்ரேல், அமெரிக்க மற்றும் பிரித்தானியாவின் கொடிகளின் கீழ் பயணிப்பதை தடுக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

செங்கடலில் ஹவுதி போராளிகள் சில கப்பல்களை குறிவைத்து நடத்திய தாக்குதலுக்கு அமெரிக்காவும் பிரித்தானியாவும் எதிர்த் தாக்குதல் நடத்திய நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.



காசாவில் கடந்த நான்கு மாதங்களில் கிட்டத்தட்ட 30 ஆயிரம் பேரைக் கொன்ற இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கையை நிறுத்தும் வரை தாக்குதல் தொடரும் என ஹவுதி போராளிகள் அறிவித்துள்ளனர். (நி-5-6)




ள்
ா

தனது கடல் பாதுகாப்பு ரோந்து படகுகளை அந்த தீவுக்கு அருகில் நிறுத்தி வைத்துள்ளது. (நி-5-6)

## பிரார்த்தனையில் இருந்தவர்களை சுட்டதில் 15 பேர் உயிரிழப்பு
### நைஜீரியாவில் சோகம்

(அபுஜா)

நைஜீரியாவில்பிரார்த்தனை செய்து கொண்டிருந்தவர்களை நோக்கி கண்மூடித்தனமாக சுட்டதில் 15 பேர் உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நைஜீரிய நாட்டின் வடக்கு பிராந்தியத்தில் உள்ள பர்கினோ பாசோ கிராமத்தில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. அங்குள்ள கத்தோலிக்க தேவாலயத்தில் நேற்றுமுன்தினம் பிரார்த்தனை நடந்து கொண்டிருந்தது. இதில் ஏராளமானோர் பங்கேற்றிருந்த நிலையில் திடீரென துப்பாக்கி ஏந்திய ஒரு கும்பல் தேவாலயத்திற்குள் நுழைந்தது. அவர்கள் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தவர்களை நோக்கி கண்மூடித்தனமாக சுட்டதில் 15 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். (நி-5-6)

## கருணாநிதியின் நினைவிடத்தை திறந்து வைத்தார் ஸ்டாலின்

(சென்னை)

தமிழ் நாட்டின் முன்னாள் முதல்வாரன கருணாநிதியின் நினைவிடத்தை தமிழ் நாட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று மாலை திறந்து வைத்தார்.

சென்னை மெரினா கடற்கரையில் தி.மு.க முன்னாள் தலைவரும் தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சருமான கருணாநிதியின் உடல் அடக்கம் செய்யப்பட்ட பகுதியிலேயே இந்த நினைவிடம் அமைக்கப்பட்டுள்ளது. பேரறிஞர் அண்ணாவின் நினைவிட வளாகத்தில் 2.23 ஏக்கர் பரப்பளவில் இந்த நினைவிடம் அமைக்கப்பட்டுள்ளதுடன் பேரறிஞர் அண்ணாவின் நினைவிடமும் தமிழ் நாட்டு அரசாங்கத்தினால் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இவை இரண்டு மக்கள் பார்வைக்காக நேற்று தமிழ் நாட்டின் முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். கருணாநிதியின் நினைவிடத்தில் கருணாநிதி அமர்ந்த நிலையில் எழுதும் வடிவிலான சிலை அமைக்கப்பட்டுள்ளது.

அதன் முன்பாக இருபுறமும் தமிழ் செம்மொழி என மத்திய அரசாங்கம் ஏற்ற முடிவை பாராட்டி காங்கிரஸின் முன்னாள் தலைவர் சோனியா காந்தி கருணாநிதிக்கு எழுதிய கடிதம் ஆங்கிலத்திலும் தமிழிலும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த சதுக்கத்தின் கீழே நிலவறைப் பகுதியில் கலைஞர் உலகம் எனும் பெயரில் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.

இதன் இடதுபுறத்திலுள்ள, நடைபாதையின் வலப்புறத்தில் திருவள்ளுவர் சிலை, குடிசை மாற்றுவாரியம் ஆகியன விளக்கொளியுடன் படங்களாக அமைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிய மருத்துவரின் ஆலோசனையின்றி சிகிச்சை பெறுவது உயிராபத்தானது

## பிளாஸ்ரிக் அறுவை சிகிச்சை வைத்திய நிபுணர்கள் சங்கம் எச்சரிக்கை

**(கொழும்பு) பயிற்சி பெற்ற மருத்துவரின் தலையீடு இல்லாமல் பிளாஸ்ரிக் அறுவை சிகிச்சை செய்வது உயிருக்கு கூட ஆபத்தாகிவிடும் என பிளாஸ்ரிக் அறுவை சிகிச்சை வைத்திய நிபுணர்களின் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

இதுஅறுவை சிகிச்சை அல்ல. அது உடல் வடிவத்தை மீண்டும் பெறும் சிகிச்சையாகும். தகுதியற்ற பலர் இத்துறையில் பணியாற்றி வருகின்றனர்.

அண்மையில் கண்டியில் உள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் இடம்பெற்ற வயிற்றில் படிந்திருந்த 13.5 லீற்றர் கொழுப்பை அகற்றும் சத்திர சிகிச்சையானது உயிருக்கு ஆபத்தான சத்திரசிகிச்சை எனவும் வைத்தியர்கள் இதன்போது வெளிப்படுத்தியுள்ளனர். (நி-5-6)

# எதிர்கால சந்ததிகளாவது நிம்மதியாக வாழ வேண்டும்

## நீதி அமைச்சர் விஜயதாச

(கொழும்பு)

நாட்டில் சமாதானம் இல்லாமல் போய்விட்ட நிலையில் எமது எதிர்காலச் சந்ததிகளாவது நிம்மதியாக வாழக்கூடிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் நீதி அமைச்சர் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இந்த நாட்டைக் காலணித்துவ ஆட்சியில் இருந்து விடுவிப்பதற்காகத் தமிழர், சிங்களவர், பறங்கியர், முஸ்லிம்கள், மலேயர்கள் உட்பட அனைவரும் ஒன்றிணைந்து 1948 ஆம் ஆண்டில் சுதந்திரத்தைப் பெற்ற போதும் 1972ஆம் ஆண்டு அரசமைப்பை மாற்றி பூரண சுதந்திரத்தைப் பெற்றோம்.

இந்த ஒற்றுமையை அரசியல்வாதிகள் பிரித்து நாசமாக்கி அரசியல் செய்தார்கள். இதனால் நாட்டில் சமாதானம் இல்லாமல் போய்விட்டது.

கடந்த 40 வருடங்களுக்கு மேலாக அரசியல் குழப்பம் காரணமாக மிகவும் துன்பகரமான காலத்தில் இருந்திருக்கின்றோம்.

அரசியல்வாதிகள் செய்த பெரும் தவறால் இந்த நாட்டில் சமாதானம் இல்லாமல் போய்விட்டது. ஜனநாயகம் என்பது நாட்டில் எல்லோரும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதைத்தான் குறிப்பிடுகின்றது.

இருந்தபோதும் ஜனநாயகத்துக்கு எதிராக அரசியல் தலைவர்கள் சிலர் செயற்படுகின்றனர். நாங்கள் இந்த நாட்டை அழித்து நாட்டைப் பயன்படுத்தாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

எனவே நாட்டில் எல்லோரும் ஒன்றிணைந்து எதிர்காலச் சந்ததிகளாவது நிம்மதியாக வாழக்கூடிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பு என அவர் தெரிவித்தார். (நி-5-6)

# இரு லொறிகள் மோதி விபத்து ஒருவர் பலி; இருவர் காயம்



(கொழும்பு)

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கஹதுடுவ மற்றும் கொட்டாவைக்கு இடையிலான பகுதியில் இரு லொறிகள் மோதி இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் இருவர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று திங்கட்கிழமை அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் ரத்கம பிரதேசத்தை சேர்ந்த 55 வயதுடைய லொறி சாரதி யாவார்.

ரத்கம பிரதேசத்தில் இருந்து பேலியகொடை மீன் சந்தைக்கு மீன் கொள்வனவு செய்வதற்காக பயணித்த லொறி ஒன்று அம்பாந்தோட்டை பிரதேசத்தில் இருந்து குருணாகல் பிரதேசத்திற்கு சீமெந்து ஏற்றி கொழும்பு பிரதேசத்தை நோக்கி பயணித்த மற்றுமொரு லொறியுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதனையடுத்து விபத்தில் காயமடைந்த மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக அதிவேக நெடுஞ்சாலை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-5-6)

# இன்று ஒரு தகவல் 49



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## மனித மரியாதை

ஒரு பெரிய அரசியல் கூட்டம்....

அதற்கு மத்தியில் ஒரு வயதான பெரியவர் எதையோ தேடிக் கொண்டு இருந்தார். வயதான காலத்தில் இந்த இடத்தில் வந்து என்னத்தையோ தொலைத்து விட்டார் போல என்று நினைத்து பக்ககத்தில் நின்று கொண்டு இருந்த ஒருத்தர் அவரிடம் நெருங்கி ஐயா! என்னத்தை தேடிக்கொண்டு இருக்கிறீங்க என்று கேட்டாராம். அதற்கு அவர் மனிதரை தேடிக்கொண்டு இருக்கிறேன் என்று சொன்னாராம்.கேட்டவர் மிரண்டு ஓடிப்போய் விட்டார்!

செம்மறி ஆட்டுக்கு என்று ஒரு சுபாவம் இருக்கு. சிங்கம், புலி, கரடிக்கு என்று ஒரு சுபாவம் இருக்கு. நரிக்கு என்று ஒரு சுபாவம் இருக்கு.

இப்படிப்பட்ட மிருக சுபாவம் மனிதனிடம் ஒவ்வொரு நேரம் ஒவ்வொரு மாதிரியாக தலை தூக்குகிறது! இதனாலே மனித சுபாவத்தை மறந்து விடுகிறான். அதனால் தான் மனிதனை தேட வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது.

மிருகம் மனிதன் மாதிரி வேடம் போடுவதில்லை. ஆனால் மனிதன் மிருகம் மாதிரி வேடம் போடுவதுண்டு. வேடம் போடுவது மட்டுமல்ல சில சமயம் அப்படியே மாறிப் போவதுமுண்டு. ஒரு மனிதன் பீ. ஏ படித்திருக்கிறான். அதனாலே வேலைக்கு அலை கிறான். எத்தனையோ படியிலே ஏறி இறங்கி விட்டான். ஆனால் அவனுக்கு Exercise கிடைத்ததே தவிர வேலை கிடைக்கவில்லை! யோசித்தான்.

அந்த நேரம் ஒரு சர்க்கஸ் கம்பனி அவர்களின் ஊருக்கு வந்தது. அந்த கம்பனி முதலாளியை போய் பார்த்து தனக்கு ஒரு வேலை தாருங்கள் என்று கேட்டான். அதற்கு அவர் உனக்கு பார் விளையாட்டு தெரியுமா! என்று கேட்டார். எங்க பாடசாலையில் அவை எல்லாம் கற்றுக் கொடுக்க வில்லை என்று சொன்னான் அவன். பயில்வான் மாதிரி எடை தூக்க தெரியுமா? என்று கேட்டார்.

அதற்கு இருக்கிற பட்டத்தையே தூக்க முடியாமல் கஷ்டப்படுகிறேன் என்று சொன்னான். அப்படி இருக்கும் போது நான் என்னப்பா செய்ய முடியும் என்று சொன்னார். சும்மா ஒரு கோமாளி வேஷமாவது கொடுங்க என்றான். அதற்கு தான் நான்கு பேர் இருக்கிறார்கள் என்று சொன்னார் முதலாளி. ஏதாவது மனது வையுங்க என்று கெஞ்சினான். அதற்கு முதலாளி சரி ஒன்று செய் என்றார். என்ன செய்யணும் என்று கேட்டான்.

எங்க கம்பனியில ஒரு கரடி இருந்தது. அது கொஞ்ச நாள் முன்னாடி இறந்து போய் விட்டது. அதன் தோலை எடுத்து அதனை அப்படியே பத்திரப்படுத்தி வைத்து இருக்கிறோம். நீ என்ன செய்ய வேணும் என்றால் அந்த கரடியின் தோலை அப்படியே எடுத்து போர்த்திக்கணும். கரடி மாதிரியே வித்தை எல்லாம் காட்டணும். உன்னை கூண்டுக்கு கொண்டு வருவோம். நீ நிஜமான கரடி என்றே மக்கள் நினைக்க வேண்டும். நீ மனிதன் என்னும் விடயம் எனக்கும் உனக்கும் மட்டுமே தெரிந்ததாக இருக்கட்டும். என்ன சொல்கிறாய் என்று கேட்டார் முதலாளி. கொஞ்சம் கூட யோசிக்காமல் அதற்கு சரி என்று சொன்னான். அன்றைக்கே வேடம் போட ஆரம்பித்தான்!

முதல் காட்சி கூண்டுக் கம்பிக்கு உள்ளேயே தொடங்கியது. கம்பிக் கதவை தூக்கி விட்டார்கள். கரடி வெளியிலே குதித்து வருகிறது. அதாவது அந்த பையன் தான். அந்தக் கரடி வேடிக்கை எல்லாம் காட்டுகிறது. சைக்கிள் ஓட்டுகிறது. பார்த்தவர்களுக்கு ரொம்ப சந்தோசம்.

ஒரே கைதட்டல். கரடிக்கு ஒரே சந்தோசம்! காட்சி முடிந்ததும் கூண்டுக்குள் அடைத்து பின்பக்கம் கொண்டு போய் விட்டார்கள். அப்பாடா! என்று களைத்து போய் அந்த கூண்டுக்கு உள்ளேயே உட்கார்காரந்து விட்டான். வேடத்தை கூட கலைக்கவில்லை.

கொஞ்ச நேரம் கழித்து கண் திறந்து பார்த்தான். திடீரென்று ஒரு அதிர்ச்சி. ஏற்கனவே அந்த கூண்டுக்கு உள்ளே அடைத்து வைத்து இருந்த கருங்குரங்கு ஒன்று அவனிடம் குதித்து கொண்டு ஓடி வந்தது. இதை பார்த்ததும் அவன் பயந்து விட்டான். வாள்வாள் என்று கத்த ஆரம்பித்து விட்டான். வெளியேயும் வரமுடியவில்லை. கதவு பூட்டி இருந்தது. ஐயையோ என்று கத்தியபடி அங்குமிங்கும் ஓட ஆரம்பித்தான்.

மெதுவாக அந்த கருங்குரங்கு இவனிடம் வந்து இவனின் கையை பிடித்தது. பயப்படாதே! என்று சொன்னது. இவனுக்கு ஒரே ஆச்சரியம் என்ன குரங்கு பேசுகிறது என்று.

அந்த குரங்கு சொல்லியது. தம்பி பயப்படாதே! நீ பீ .ஏ படித்து விட்டு இந்த வேடம் போட்டு இருக்காய். நான் எம்.ஏ படித்து விட்டு இந்த வேடம் போட்டு இருக்கிறேன். நானும் உன்னை மாதிரி தான் பிழைப்புக்காக வேடம் போட்டு இருக்கிறேன் என்று சொல்லியதாம். பிழைப்புக்காக மனிதன் மிருகமாக மாறுவதை கூட சகித்து கொள்ளலாம். ஆனால் மனிதனே மிருகமாக மாறுவதை எப்படி சகித்து கொள்ள முடியும்?

எனக்கு என்னமோ நாளுக்கு நாள் மனித மரியாதை குறைந்து கொண்டு வருகிறது போல இருக்கிறது. Human value கூடினால் தான் ஊரும் உலகமும் நன்றாக இருக்கும். மனித உயிரோட விலையே இப்போது மிகவும் மலிவாகி போய்விட்டது. இன்றைக்கு யாரும் இறக்க வில்லை என்றால் அதுதான் பெரிய நியூஸ். எல்லாவற்றுக்கும் யார் காரணம் என்று நினைக்கிறீர்கள். மனிதன் தான்!

துப்பாக்கிக் குண்டையும் அவன் தான் செய்கிறான். துப்பாக்கி குண்டுகள் துளைக்க முடியாத காரையும் அவன் தான் செய்கிறான்!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறுதொழில் முயற்சியாளர்களின் விற்பனைக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தில் வட மாகாண தொழிற்துறைத் திணைக்களத்தின் அனுசரணையில் நேற்று விற்பனைக் கண்காட்சி ஆரம்பமானது.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் கு.பிரபாகரமூர்த்தி தலைமையில் ஆரம்பமான குறித்த கண்காட்சியில் குறித்த பிரதேசங்களில் வசிக்கும் சிறுதொழில் முயற்சியாளர்கள் தங்களது உற்பத்தி பொருட்களை காட்சிப்படுத்தி அதிகளவான விற்பனையில் ஈடுபட்டனர்.

உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதோடு அவர்களது உள்ளூர் உற்பத்திகளின் தரத்தை மக்கள் மத்தியில் இலகுவாக கொண்டு சென்று உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்குடன் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தில் ஒவ்வொரு மாதமும் குறித்த விற்பனை கண்காட்சி இடம்பெற்றுவருகிறது. (நி-5-6)

# பேருந்தில் தொங்கியவாறு பயணித்தால் சட்ட நடவடிக்கை எடுங்கள்

## சமூக ஆர்வலர்கள் கோரிக்கை

**(யாழ்ப்பாணம்) பேருந்துகளின் மிதிபலகையில் தொங்கியவாறு ஆபத்தான பயணங்களை மேற்கொள்வோருக்கு எதிராக பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.**

பேருந்தின் மிதிபலகையில் நின்றவாறு ஆபத்தான பயணங்கள் மேற்கொள்வதால் விபத்துக்கள் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அண்மைக் காலமாகவே பேருந்து விபத்துக்களில் இரு மரணங்கள் சம்பவித்துள்ளன.

அல்லைப்பிட்டியில் பெண்ணொருவர் இறங்க முற்பட்ட வேளை தவறி விழுந்து உயிரிழந்தமை, மற்றும் கடந்த 23 ஆம் திகதி நல்லூர் ஆலயத்திற்கு முன்பாக பேருந்தின் மிதிபலகையில் பயணித்த இளைஞன் தவறிவிழுந்து உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# மீனவர்களின் அத்துமீறலுக்கு எதிராக கறுப்புக் கொடி போராட்டம்

## யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்கள்

(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து யாழ் மாவட்ட கடற்பகுதிகளில் கறுப்புக் கொடி போராட்டமொன்றை எதிர்வரும் மார்ச் மாதம் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கவுள்ளதாக நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் ஸ்ரீ கந்தவேள் புனிதப் பிரகாஷ் தெரிவித்தார்.

எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் சிலர் இலங்கை சிறையில் உள்ள நிலையில் அவர்களை விடுவிக்குமாறு இந்திய அரசு அழுத்தம் வழங்கி வருகிறது.


இதனை நாம் வன்மையாக கண்டிக்கிறோம். எமக்கே சொந்தமான கடலை யாருக்கும் தாரை வார்க்க முடியாது.

இதனை வலியுறுத்தி கடலில் கறுப்புக் கொடி ஏந்தி போராட்டம் நடத்துவதோடு எமது போராட்டம் இலங்கை கடல் எல்லை வரை தொடரவுள்ளதாகவும் தெரிவித்தார். (நி-5-6)



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சமத்துவக் கட்சியின் பொதுச்செயலாளருமான மு.சந்திரகுமார் மற்றும் சமத்துவக் கட்சியின் தலைவர் சு.மனோகரன் ஆகியோர் கடந்த சனிக்கிழமை கொழும்பில் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர். (படம்- தேவானந்தன்)

# சேதமடைந்த வீதியினை செப்பனிட்ட சுதந்திரபுர மக்கள்



(அக்கராயன்)

பரந்தன் முல்லைத்தீவு ஏ-35 சாலையில் இருந்து சுதந்திரபுரம் சந்தி தொடக்கம் கிராமத்திற்கு செல்லும் கொங்கிறீட் வீதியே பெரும் சேதமடைந்த நிலையில் நேற்று முன்தினம் ஒன்று திரண்ட மக்கள் தமது கிராமத்தின் உழவு இயந்திரங்களை பயன்படுத்தி வீதியில் காணப்பட்ட குழிகளை தற்காலிகமாக மூடியுள்ளனர்.

மக்களுடன் இணைந்த இராணுவத்தினரும் இவ்வீதியினை தற்காலிகமாக புனரமைப்பதில் உதவிகள் புரிந்தனர். 2013 ஆம் ஆண்டில் சுதந்திரபுரம் கிராமத்திற்கான எட்டு கிலோ மீற்றர் வீதி கொங்கிறீட்டினால் புனரமைக்கப்பட்ட போதிலும் வீதியினை புனரமைப்பு செய்தவர்கள் ஒழுங்காக வேலைகள் செய்யாததன் காரணமாக வீதியில் பெரும் குழிகள் ஏற்பட்டுள்ளன. வீதியினை புனரமையுங்கள் என அதிகாரிகளிடம் தொடர்ச்சியாக கோரிக்கைகள் விடுத்தும் வீதி புனரமைக்கப்படாத நிலையில் மக்களே வீதியினை தற்காலிகமாக புனரமைத்துள்ளனர். (நி-5-6-350)

# சட்டவிரோத செயலில் ஈடுபட்ட நால்வர் கைது

(தருமபுரம்)

புதுக்குடியிருப்பில் வெவ்வேறு பகுதிகளில் உடும்புகளை வேட்டையாடிய 3 சந்தேக நபர்கள் மற்றும் இறைச்சிக்காக ஆமையை கொண்டு சென்ற ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு நேற்று முன்தினம் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமையவே குறித்த கைது நட வடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டது. கைதான நால்வரையும் முல்லைத்தீவு நீதி மன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-5-6-316)

# மேய்ச்சல் தரவைகள் இன்மையால் கால்நடை பண்ணையாளர்கள் சிரமம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேசத்தில் உள்ள கால்நடை பண்ணையாளர்கள் தங்களுடைய கால்நடைகளை பயிர்ச்செய்கை காலங்களில் பராமரிப்பதற்கு ஏற்றவகையிலே மேய்ச்சல் தரவைகள் இன்மையால் தாங்கள் வருடந்தோறும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையிலே மேய்ச்சல் தேவைகளுக்கான இடங்களை ஒதுக்கீடு செய்து தருமாறு தொடர்ச்சியான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதும் இது வரை எந்த முயற்சிகளும் கைகூடவில்லை.மேலும் வன வளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக் கீழே குறித்த பிரதேசங்களாக காணப்படுவதனால் அவற்றில் கால்நடை பண்ணையாளர்கள் தங்களுடைய கால்நடைகளை பராமரிப்பதில் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறன நிலையில் குறித்த பிரதேசத்தில் சுமார் ஆயிரத்து 600 ஏக்கர் நிலப்பரப்பு கால்நடைகளுக்கான தேவையான மேய்ச்சல் தரவைகளாக காணப்படுவதாக கால்நடை பண்ணையாளர்கள் தெரிவித்தனர். (நி-5-6-350)

## மணல் அகழ்வை தடுக்க

# கொக்காவில் தேராங்கண்டல் பகுதியில் காவலரண் அமைக்க வேண்டும்

(அக்கராயன்)

முல்லைத்தீவு துணுக்காயின் புத்துவெட்டுவான், பழையமுறிகண்டி, ஐயன்கன்குளம் கிராமங்களில் தொடர்ந்து நடைபெறுகின்ற மணல் அகழ்வினைக் கட்டுப்படுத்துவதற்கு கொக்காவில் பகுதியிலும் தேராங்கண்டல் பகுதியிலும் பொலிஸ் இராணுவம் இணைந்து காவல் அரண் அமைக்க வேண்டும் என இப்பகுதி பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

மேற்படி கிராமங்களில் கடந்த 14 ஆண்டுகளாக தொடரும் மணல் அகழ்வினால் கிராமத்தின் சூழல் பெரும் அழிவுகளை எதிர்கொண்டுள்ளது. 2010 ஆம் ஆண்டிற்கு பின்னர் புனரமைக்கப்பட்ட வீதிகள் கூட மணல் டிப்பர்களின் பயணிப்புகளினால் பெரும் சேதங்களை எதிர் கொண்டுள்ளன. இந்நிலையில் மணல் அகழ்வினைக் கட்டுப்படுத்துவதற்கு இரு இடங்களில் கூட்டு காவல் அரணை அமைப்பதன் மூலம் தடுக்க முடியும்.

இது தொடர்பாக இறுதியாக நடைபெற்ற துணுக்காய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இவ்வேண்டுகோள் முன்வைக்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-350)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர் 417





மூன்றுபேரும் குதிரைகள் மீது ஏறிக்கொண்டு புறப்பட்டார்கள். அநுராதபுர நகரத்தின் வடக்கு வாசல் வழியாக வெளியேறினார்கள். திருவிழாக் கூட்டம் இன்னமும் நகரிலிருந்து நாலாபுறமும் 'ஜேஜே' என்று சென்று கொண்டிருந்தபடியால் இவர்களை யாரும் கவனிக்கவில்லை.

அநுராதபுரத்துக்கு வடகிழக்கில் ஒரு காத தூரத்தில் மகிந்தலை என்னும் சிறிய பட்டணம் இருந்தது. "அசோக சக்கரவர்த்தியின் குமாரரர் மகிந்தர் முதன் முதலில் இந்த ஊரிலேதான் வந்திறங்கி புத்த மதத்தை உபதேசிக்கத் தொடங்கினார்! எப்படிப்பட்ட பாக்கியசாலி அவர்! ஆயுதந் தாங்கிப் படைகளை அழைத்துக் கொண்டு நாடு கவர்வதற்கு அவர் போகவில்லை. கொலைகாரர்களிடம் சிக்காமல் ஒளிந்து மறைந்து திரிய வேண்டிய அவசியமும் அவருக்கு ஏற்படவில்லை!" என்றார் அருள்மொழிவர்மர்.

"அவருக்குக் கொடுத்து வைத்திருந்தது அவ்வளவு தான்!" என்று சொன்னான் வந்தியத்தேவன்.

இளவரசர் நகைத்தார். "நீர் எப்போதும் என்னை விட்டுப் பிரியவே கூடாது. நீர் பக்கத்தில் இருந்தால் எப்படிப்பட்ட கஷ்டமும் சந்தோஷமாகி விடும்!" என்றார் இளவரசர்.

"அதேமாதிரி எப்படிப்பட்ட சந்தோஷமும் கஷ்டமாகி விடும்!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

இச்சமயத்தில் சாலையில் அவர்களுக்கு எதிர்ப்பக்கத்தில் ஒரு புழுதிப் படலம் தெரிந்தது. பல குதிரைகள் நாலு கால் பாய்ச்சலில் வரும் சத்தமும் கேட்டது. சிறிது நேரத்துக்கெல்லாம் சிறிய குதிரைப் படை ஒன்று கண்ணுக்குத் தெரிந்தது. குதிரை வீரர்கள் கையில் பிடித்திருந்த வேல் முனைகள் காலை வெயிலில் பளபளவென்று ஜொலித்தன. "ஐயா! உறையிலிருந்து கத்தியை எடுங்கள்!" என்று எச்சரித்தான் வந்தியத்தேவன்.

### முப்பத்தொன்பதாம் அத்தியாயம்
### "இதோ யுத்தம்!"

வந்தியத்தேவன், "உறையிலிருந்து கத்தியை எடுங்கள்!" என்று சொன்ன உடனே, இளவரசர் "இதோ எடுத்துவிட்டேன்!" என்று பட்டாக் கத்தியை உருவி எடுத்தார். அதேசமயத்தில் வந்தியத்தேவனும் உறையிலிருந்து கத்தியை எடுத்தான். அவை பிரம்மாண்டமான ராட்சதக் கத்திகள். அநுராதபுரத்துப் போதி விருட்சத்தின் அருகில் குதிரைகளுடன் வந்து நின்றவர்கள் அந்தக் கத்திகளையும் கொடுத்துவிட்டுச் சென்றார்கள்.

இளவரசர் குதிரையிலிருந்து கீழே குதித்து, "வா இறங்கி! உன்னுடைய அதிகப் பிரசங்கத்தை என்னால் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது! இங்கேயே ஒரு கை பார்த்து விட்டுத்தான் போகவேண்டும்!" என்று கடுமையாகக் கூறியதும் வந்தியத்தேவன் திகைத்துப் போனான். இது விளையாட்டா, வினையா என்று அவனுக்குத் தெரியவில்லை. எனினும் இளவரசர் குதிரையிலிருந்து பூமியில் இறங்கி விட்டபடியால் அவனும் இறங்க வேண்டியதாயிற்று.

"என்ன ஐயா! ஏன் தயங்குகிறீர்! நேற்றிரவு என்னை நீர் அவமானப்படுத்தப் பார்த்தீர் அல்லவா? உம்முடைய பாட்டன் வீட்டு அரண்மனை முற்றத்தில் என் பாட்டன்மார்கள் வந்து காத்திருந்தார்கள் என்று சொல்லவில்லையா? அவர்களுடைய குடை, சிவிகை ஆகியவற்றைப் புலவர்கள் தட்டிக்கொண்டு போவதைப் பார்த்துப் பொருமினார்கள் என்று கூறவில்லையா? அதை நினைத்துப் பார்க்கப் பார்க்க எனக்குப் பொறுக்க முடியவில்லை இரண்டில் ஒன்று தீர்த்துக் கட்டிவிட்டுத்தான் இங்கிருந்து புறப்படவேண்டும்!" என்று சொல்லிக்கொண்டு இளவரசர் இரண்டு கையினாலும் தமது பட்டாக்கத்தியின் அடியைப் பிடித்து சுழற்றிக்கொண்டே வந்தியத்தேவனிடம் அணுகினார்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## யார் சிறந்த மாணவன்

(நேற்றைய தொடர்ச்சி)

எனக்கு அந்த கிளியென்றால் மிகவும் பிரி யம். எனக்காக அந்த கிளியை நீங்கள் கண்டு பிடித்து தர வேண்டும் என்றார்.

சீடர்களும் ஆர்வ மிகுதியால் நிச்சயம் நாங் கள் கண்டுபிடித்து தருகிறோம். குருவே கடைசியாக அது பறந்து போன இடத்தை எங்களுக்கு காட்டுங்கள் என்றனர்.

குருவும் தன் சீடர்களை அந்த இடத்திற்கு அழைத்து சென்றார். அங்கு நீண்ட மற்றும் அகலமான ஆறு ஒன்று தெரிந்தது. அதை தாண்டி ஒரு சிறு தீவு தெரிந் தது. என் கிளி இந்த ஆற்றை கடந்து அந்த தீவுக்கு தான் சென்றது என்றார் குரு.

உடனே மூவரும் ஆற்றில் குதித்து ஆற்றை கடக்க தயாரானார் கள். ஆற்றில் குதிக்க சென்ற சீடர்களை குரு தடுத்தார். என்ன சீடர் களே அவசரத்தில் அறிவிழந்தீர்களா? இந்த ஆற்றில் முதலைகள் இருப்பதை மறந்து விட்டீர் களா?



என்று கேட்டார்.

தங்கள் அவசர புத்தியை உணர்ந்த சீடர்கள். அந்த தீவுக்கு செல்ல வேறு வழி ஏதேனும் இருக்கிறதா? என்று பார்த்தனர். அப்பொழுது அங்கு பழுதடைந்த நீண்ட பாலம் ஒன்று இருந்தது. அதன் வழியாக அந்த ஆற்றை கடக்கலாம். ஆனால் அந்த பாலத்தின் வழியாக ஒரு நேரத்தில் ஒரு சீடர் மட்டும் தான் செல்ல முடியும்.

முதலாவதாக இருந்த சீடர், தான் அந்த பாலத்தை கடந்து கிளியை கொண்டு வருவதாக கூறி பாலத்தில் ஏறி நடக்க ஆரம்பித்தார். இந்த சீடர் நடக்க நடக்க பாலம் ஆடிக்கொண்டே இருந்தது. எப்படியாவது கிளியை பிடித்து விட வேண்டும் என்ற எண்ணத்தில் முன்னேறி நடந்தான். ஆனால் திடீரென பாலத்தின் நடுவே சிறிது தூரம் எந்த ஒரு கட்டைகளும் இல்லாமல் பாலம் சிதை ந்து இருந்தது. இந்த இடைவெளியை எப்படி கடப்பது என்று யோசித்துக் கொண்டிருந்த சீடனுக்கு ஒரு யோசனை தோன்றியது. பாலத்தின் ஒரு பக்கத்தை பிடித்து தொங்கிக் கொண்டே இந்த இடைவெளியை கடந்து விடலாம் என்று யோசி த்தான். அவ்வாறே பிடித்து தொங்கிக் கொண்டே நகர்ந்தான். பாதி தூரம் சென்றதும் கை வலி பின்னியது. பாலத்திலிருந்து கீழே உள்ள ஆற்றில் விழுந்தான். ஆற்றில் முதலைகள் இருப்பதை அறிந்து உயிரை கையில் பிடித்துக் கொண்டு வேகமாக நீச்சல் அடித்து கரைக்கு திரும்பினான்.

அடுத்ததாக இரண்டாவது சீடனும் முயற்சித்தான். அதே போல் அந்த உடைந்த இட த்தை கடக்கும் பொழுது அதே போல் ஆற்றில் விழுந்தான்.

மூன்றாவது சீடனும் வந்தான். நானும் முயற்சித்து பார்க்கிறேன் குருவே என்றான். சரி என்று குரு சொல்ல வேக வேகமாக பாலத்தை கடக்க முயன்றான். ஆனால் இந்த சீடனும் அந்த உடைந்த இடைவெளியை கடக்க முடியாமல் ஆற்றில் விழுந்தான். இவ்வாறு மூவரும் ஆற்றில் விழுந்து நம் மால் இந்த பாலத்தை கடக்கவே முடியாது என்ற மன நிலையை தங்களு டைய முகத்தில் சுமந்து கொண்டு சோகமாக ஒரு மரத்தடியில் உட்கார்ந்தனர்.

குரு அவர்கள் மூவரையும் பார்த்தார். சிறந்த சீடனுக்கான தகுதி இவர்களிடத்தில் இல்லை என்று அங்கிருந்து கிளம்ப முயற்சித்தார். அப்பொழுது அங்கு இரு ந்த மூன்றாவது சீடன் எழுந்து வந்தான். குருவே எனக்கு இன்னும் ஒரு வாய்ப்பு தாருங்கள் என்று கேட்டான். நான் மீண்டும் முயற்சிக்க விரும்புகிறேன் என்று கூறினான்.

குரு இந்த மூன்றாவது சீடனை சிறந்த சீடன் என்று அங்கீகரித்து தேர்வு செய்தார்.

கதையின் நீதி

அந்த குருவிற்கு தெரியும் இல்லாத பறவையை யாராலும் கொண்டு வர முடியாது என்று. எனினும் தன்னுடைய சீடர்களின் மனநிலையை தெரிந்து கொண்டு அவர்களில் யார் ஸ்திரத்தன்மை வாய்ந்தவர்கள், மனதளவில் சக்தி வாய்ந்தவர்கள் யார் என்பதை கண்டுபிடிக்கவே இப்படி ஒரு போட்டியை வைத்தார். அதில் மூன்றாவது சீடன் மற்ற இருவரை விட மீண்டும் முயற்சிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண் டவனாக இருந்ததால் அவனை சிறந்த சீடன் என்று அங்கீகரித்து தேர்வு செய்தார்.

முயற்சி செய்தால் மட்டும் அல்ல, முயற்சி செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருந்தால் கூட நீங்கள் மதிக்கப்படுவீர்கள்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனியொரு விதி செய்வோம் – அதை
எந்த நாளும் காப்போம்.
– பாரதியார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மக்களின் கரிசனையை இழந்த தமிழ் அரசியல் கட்சிகள்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சமகால நிலைமை மிகவும் வேதனை தருவதாக உள்ளது.

அந்தளவுக்கு அந்தக் கட்சிக்குள் உள்ளக முரண்பாடுகள் அதிகரித்துள்ளன. இந்த உள்ளக முரண்பாடென்பது பதவி ஆசையால் ஏற்பட்டதென்பதும் புரிதற்குரியது.

ஆம், நீண்ட நெடுங்கால வரலாற்றைக் கொண்ட இலங்கைத் தமிழரசுக் கட்சி இன்று நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்பார்த்துக் காத்திருக்கிறது.

இதனிடையே தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள சிக்கல்களைத் தீர்த்து சுமுகமான நிலைமையை ஏற்படுத்த சில தரப்புகள் முற்பட்டாலும் அவை எதுவும் இன்னமும் வெற்றி தரவில்லை.

இவ்வாறு சமரச முயற்சிகள் வெற்றி தராததற்கும் சமரச முயற்சிகள் குறித்து சம்பந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்தாமல் தங்கள் பாட்டில் செயற்படுவதற்கும் இரண்டு விடயங்கள் முதன்மைக் காரணங்களாக உள்ளன.

அதாவது தமிழ் மக்களின் நலன்சார்ந்து செயற்படக்கூடிய பொதுமைப்பாடுடைய ஓர் அமைப்பு இல்லாமை.

இரண்டாவது காரணம் தமிழரசுக் கட்சி நீதிமன்றம்வரை சென்றுவிட்டது. கட்சியின் நிர்வாகத்தை இயக்குவதில் இடர்பாடுகள் ஏற்பட்டுள்ளன என்ற நிலைமைகள் இருக்கின்றபோதிலும் நம் தமிழ் மக்கள் அதுபற்றி இம்மியும் கருசனையற்றவர்களாக இருக்கின்றனர்.

ஆம், ஒரு காலத்தில் அத்தனை தமிழ் மக்களின் வீடுகள் தோறும் கொண்டாடப்பட்ட தமிழரசுக் கட்சி இன்று தமிழ் மக்களிடம் இருந்து அந்நியப்பட்டுள்ளது.

தவிர, சமகால இளைஞர்கள் அரசியல் பற்றியும் தமிழ் மக்களின் உரிமைகள் பற்றியும் அறியாதவர்களாக இருக்கின்றனர்.

அவர்களைப் பொறுத்தவரை பெறுமதி வாய்ந்த கையடக்கத் தொலைபேசியும் பெறுமதி வாய்ந்த மோட்டார் சைக்கிளுமே அவர்களின் உலகமாக மாறிவிட்டது.

எனவே இன்றுள்ள இளைஞர்களுக்கு தமிழரசுக் கட்சி, அதன் பயணம், அதற்குள் தற்போது நடக்கின்ற சர்ச்சைகள், இவ்வாறான சர்ச்சைகளால் தமிழ் மக்களுக்கு ஏற்படக்கூடிய பாதகங்கள் என எதுவுமே தெரியாமல் உள்ளது.

நிலைமை இதுவாக இருக்கையில், தமிழரசுக் கட்சியை எப்படியும் ஆக்கலாம் என்ற மிக மோசமான மனநிலை அந்தக் கட்சிக்குள் இருப்பவர்கள் சிலரிடம் ஏற்பட்டுவிட்டது.

இவ்வாறானதொரு சூழ்நிலை ஏற்படுவதற்கு நம்மில் பலர் காரணமாக இருந்தனர் என்பது மறுக்கமுடியாத உண்மை.

ஆம், 2015ஆம் ஆண்டு தமிழ் மக்கள் பேரவை என்ற மக்கள் இயக்கம் உருவான போது அதனை வெட்டிச் சரிப்பதில் பலரும் ஆர்வம் காட்டினர்.

இதில் சில புத்திஜீவிக்ளும் உள்ளடங்கியிருந்தனர்.

தவிர, தத்தம் கற்பனைக்கு ஏற்றாற்போல தமிழ் மக்கள் பேரவையை விமர்சனம் செய்தனர். அதற்கு சில ஊடகங்களும் உதவி செய்தன. ஈற்றில் தமிழ் மக்கள் பேரவையை ஒரு மாதிரியாகத் தகர்த்தனர்.

என்ன செய்வது நாம் செய்த ஊழ்வினை புத்திஜீவிகளும் பேதலித்து நிற்பதாக நிலைமை வந்துற்றது.

இனி நடப்பதைக் காண்பதேயன்றி, வேறு என்னதான் செய்ய முடியும்.

# திருமலையில் தெரிவான நிர்வாக சபையினை அங்கீகரித்தால் வழக்கை வாபஸ் பெற தயார்

## வழக்குத் தொடுனர் தெரிவிப்பு

(திருகோணமலை)

கடந்த ஜனவரி மாதம் 27ம் திகதி திருகோணமலையில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் நிர்வாகத்தெரிவுக்கூட்டத்தில் தெரிவான நிர்வாக சபையினை அங்கீகரித்தால் திருகோணமலை நீதிமன்றில் தான் தொடுத்த தமிழரசுக் கட்சி மீதான வழக்கை உடன் வாபஸ் பெறுவதாக வழக்கு தொடுனரான சந்திரசேகரம் பரா தெரிவித்துள்ளார்.

நேற்று திருகோணமலை ஆயர் இல்லத்தில் கட்சியின் உயர்மட்டக் குழுவினுடனான கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இந்நிலையில் இலங்கை தமிழரசு கட்சியின் உயர்மட்ட குழு இதனை நடைமுறைப் படுத்துவதாக உறுதியளித்ததாகவும் தெரிய வந்துள்ளது.

இலங்கை தமிழரசு கட்சியின் மூத்த துணைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் மற்றும் செயலாளர் வைத்தியர் சத்தியலிங்கம் மன்னார் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், மட்டக்களப்பு மாநகர சபையின் முன்னாள் மேயர் சரவணபவன் ஆகியோர் மற்றும் திருகோணமலை மறை மாவட்ட ஆயர் நோயல் இம்மானுவேல் ஆகியோர் முன்னிலையில் குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.(ம-7)

# மோ.சைக்கிள் விபத்து பெண் படுகாயம்

(ஆராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற பெண்ணொருவர் விபத்தில் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுக் காலை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

அராலி பாலத்திற்கு அண்மையில் உள்ள வீதியால் சென்ற மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்து பயணித்த பெண்ணின் சேலையானது மோட்டார் சைக்கிள் சில்லில் சிக்குண்டதால் அவர் கீழே விழுந்து படுகாயமடைந்துள்ளார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த பெண் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-7,33)

# மூச்சுவிட சிரமப்பட்ட கனடா பிரஜை யாழில் மரணம்

(யாழ்ப்பாணம்)

மூச்சுவிட சிரமப்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட கனடா பிரஜை ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

மூச்செடுக்க சிரமப்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சோதிலிங்கம் கந்தசாமி என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இவர் கடந்த சில நாட்களுக்கு முன்னர் மாதகலில் உள்ள உறவினர் வீட்டுக்கு வருகை தந்திருந்தார்.

இந்நிலையில் அவருக்கு நேற்று முன்தினம் மூச்சு எடுப்பதில் சிரமம் ஏற்பட்டதால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(ம-7,33)

# விபரீத முடிவெடுத்து ஒருவர் உயிரிழப்பு

(மானிப்பாய்)

விபரீத முடிவெடுத்து குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வைத்தியசாலை வீதி மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த சிவாயநம சுயாஸ்கரன் (வயது 31) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் மன அழுத்தம் காரணமாக இவ்வாறு தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் நேற்று சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-7,33)

# இணைய பாதுகாப்புச் சட்டத்திற்கு சபாநாயகர் சான்றளித்தமை தவறு

## சந்திம வீரக்கொடி

(கொழும்பு)

பாராளுமன்றம் ஒத்தி வைக்கப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் இணைய பாதுகாப்பு சட்டதிற்கு சபாநாயகர் சான்றளித்தமை தவறு என பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "இணைய பாதுகாப்பு சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் பாராளுமன்றம் தொடர்பில் நாட்டு மக்களுக்கு அவநம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

சட்டமூலமொன்று பாராளுமன்றில் முன்வைக்கப்பட வேண்டுமாயின் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் பிரகாரம் செயற்பட வேண்டும்.

இணையவழி பாதுகாப்பு சட்டம் நிறைவேற்றப்பட்டதன் ஊடாக சபாநாயகர் தன்னிச்சையாக செயற்பட்டுள்ளார்.

ஏனென்றால் சட்டமூலமொன்று சட்டமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமாயின்

நியதிகளுக்கமைய பாராாளுமன்றம் செயற்பட வேண்டும்.

சபாநாயகர் அதனை செய்யவில்லை. பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் அவர் சட்டமூலத்தில் கையெழுத்திட்டுள்ளார்." என கூறியுள்ளார். (ம-7)

# இலங்கை-ருமேனியாவிடையே புதிய ஒப்பந்தம் கைச்சாத்து

(கொழும்பு)

இலங்கைக்கும் ருமேனியாவுக்கும் இடையில், இரட்டை வரி விதிப்பை தவிர்ப்பதற்கான ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது

அதன்படி பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும், ருமேனிய தூதுவர் டொமினா ஸ்டெலுசாவுக்கும் இடையில் அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போது, இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

அதேநேரம், இரு நாடுகளுக்கும் இடையில் கல்வி, விவசாயம், தொடருந்து மற்றும் தகவல் தொழிநுட்பம்ஆகிய துறைகளிலும் ஒத்துழைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# விமானப்படையின் தொழிநுட்ப கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

இலங்கை விமானப்படையின் 73 ஆவது ஆண்டை முன்னிட்டு யாழில் விமானப்படையினர் கல்வி மற்றும் தொழிநுட்ப கண்காட்சியை நடத்தவுள்ளதாக விமானப்படையின் எயர் வைஸ் மார்சல் முதித மகவத்தகே தெரிவித்தார் (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தாய்மொழிகள் தினம் பெப்ரவரி 21 ஆம் திகதி

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

11



| வேற்றுமை | உருபு | எழுத்துத்தமிழ் | யாழ்ப்பாணத்தமிழ் | மட்டக்களப்புத்தமிழ் |
|---|---|---|---|---|
| 1 | - | அவன் | அவன் | அவன் |
| 2 | ஐ | அவனை | அவனை | அவன |
| 3 | ஆல் | அவனால் | அவனாலை | அவனால |
| | ஒடு | அவனோடு | அவனோடை | அவனோட |
| 4 | கு | அவனுக்கு | அவனுக்கு | அவனுக்கு |
| 5 | இன் | அவனின் | அவனிலும் | அவனிலும் |
| 6 | அது | அவனது, அவனுடைய | அவன்ரை | அவன்ட |
| 7 | இல் | அவனில் | அவனிலை | அவனில |

### வினைச்சொற்களின் பயன்பாடுகள்

யாழ்ப்பாணப் பேச்சுவழக்கில் நான்கு வகையான பேச்சு வகைகள் காணப்பட மட்டக்களப்புப் பேச்சுத் தமிழில் மூன்று வகையான பேச்சு வகைகள் காணப்படுகின்றன. மரியாதை மிகு பேச்சுவகை, சாதாரண பேச்சு வகை, மரியாதை அற்ற பேச்சு வகை என காணப்படும். இவற்றில், யாழ்ப்பாண வழக்கில் காணப்படும் இடைநிலை பேச்சு வகை இல்லை. ஆனாலும் இந்த இடைநிலை பேச்சு வகை மட்டக்களப்பு வழக்கிலும் தற்போது சிறிதளவு காணப்படுகிறது. வடக்கிற்கும் கிழக்கிற்குமான் தொடர்பு இதற்கான காரணமாக இருக்கலாம்.

பல வேளைகளில் மரியாதை மிகு பேச்சுவகையும் சாதாரண பேச்சுவகை அல்லது மரியாதை அற்ற பேச்சு என இரு வகையான பேச்சு வகைகள் மாத்திரம் காணப்படும் சந்தர்ப்பங்களும் உண்டு. மரியாதை மிகு பேச்சுவகையே பாரியளவு பாவனையில் உள்ளது. இவ்வாறு பேசுவது நாகரிகப் பண்பாகக் கருதப்படுகிறது. ஆயினும் கிராமப்புறங்களில் இதற்கு விதி விலக்குகளும் உள்ளன.

மட்டக்களப்புப் பேச்சுத் வழக்கிற்கும் யாழ்ப்பாணப் பேச்சு வழக்கிற்கும் சிறியளவு வேறுபாடு காணப்படுகின்றது. இதில் குறிப்பிடத்தக்க வித்தியாசம் என்னவெனில், யாழ்ப்பாணப் பேச்சுவழக்கில் காணப்படும் மாத்திரையளவு மட்டக்களப்புப் பேச்சுத்வழக்கில்குறைந்துஒலிக்கும்.

உதாரணம்:

யாழ்ப்பாணப்பேச்சுவழக்கு வாங்கோ-இங்கு ஓகாரம் பாவிக்கப்படுகிறது

மட்டக்களப்புப் பேச்சு வழக்கு: வாங்க - இங்கு அகரம் பாவிக்கப்படுகிறது.

### பிறமொழிச்சொற்கள்

போர்த்துக்கேய, டச்சு, ஆங்கில மற்றும் அரபு ஆகிய மொழிகளின் செல்வாக்கு மட்டக்களப்புப் பேச்சுத்தமிழில் கலந்து காணப்படுகின்றன. போர்த்துக்கேய, டச்சு, ஆங்கில ஆட்சிகள் இப்பிரதேசங்களில் காணப்பட்மை மற்றும் போர்த்துக்கேய, அராபிய வாரிசுகள் இப்பிரதேசங்களில் கலந்திருப்பது என்பன இப்பகுதித் தமிழில் பிறமொழிச் சொற்கள் கலப்பதற்கான முக்கிய காரணம் எனலாம்.

### அரபுமொழிச்சொற்கள்

அரபுமொழியிலிருந்து தமிழில் கலந்தசொற்கள் அட்டவணையில் காணப்பட்டுள்ளன.

| அரபுவழி | பொருள் |
|---|---|
| ஈமான | நம்பிக்கை |
| சுன்னத்து | விருத்தசேதனம் |
| செய்த்தான் | பிசாசு |
| மவுத்து | இறப்பு |
| மௌலவி | இசுலாம்மார்க்கப் பண்டிதர் |
| கலால் | அங்கீகரிக்கப்பட்டது |
| கறாம் | நிராகரிக்கப்பட்டது |
| சலாம் | வணக்கம் |

### சமகாலப்போக்கு

பழந்தமிழ்ச் சொற்கள் மற்றும் வடமொழிச் சொற்கள் அரிதாகக் காணப்படுவதற்கு மட்டக்களப்புத் தமிழகம் பிற பகுதி மக்களுடன் தொடர்படாமைதான் காரணங்களில் ஒன்று எனக் கூறப்படுகிறது. உலகமயமாதல் பல மாற்றங்களை நிகழ்த்திக் கொண்டு இருக்கையில் மொழியும் பல தாக்கங்களுக்கு உள்ளாவது தவிர்க்க முடியாத ஒன்று. இதற்கு மட்டக்களப்புப் பேச்சுத் தமிழும் விலக்கல்ல. இப்பகுதித் தமிழுக்கு உள்ள தனித்துவம் காக்கப்படுவது கிராமங்களிளன்றி நகரங்களிலல்ல.

மட்டக்களப்புக் கிராமங்களில் பேசப்படும் தமிழை, தம்மை நாகரிகம் அடைந்தவராகக் கருதும் நகரத்தில் வாழ்வோர் நாட்டார் வழக்காகருதி நகையாடுவதுண்டு. இன்றைய தலைமுறையோ நவீன காலனித்துவத்தின் சின்னமாகத் திகழும் ஆங்கில மொழி மோகத்தால் அது பாதி இது பாதியாக 'தமிங்கிளீஸ்' பேசுவதே கௌரவம் என்று கருதுகின்றனர். (நன்றி இணையம்.)

### நீர்கொழும்புத்தமிழ்

நீர்கொழும்புத் தமிழ் என்பது சிங்களவர்கள் என அடையாளப்படுத்தப்பட்ட சிங்கள பேச்சு வழக்கில் உருபுத் தொடரியல் அமைப்புக் கொண்ட நீர்கொழும்பைச் சேர்ந்த இரு மொழியுடைய மீனவர்களால் பயன்படுத்தப்படுகிறது. இது சிங்கள மொழியின் தாக்கத்துடன் இலக்கண தனித்தன்மையுடன் உருவாக்கப்பட்டது. இங்கு வழுவினைகள் தமிழ் வடிவத்தை விட சிங்கள அமைப்பையே கொண்டுள்ளது.

### இலங்கை முஸ்லிம்கள் பேசும் தமிழ் (இணையத்திலிருந்து)

இலங்கை முஸ்லிம்கள் பேசும் தமிழ் பெரும்பாலும் தூத்துக்குடி தமிழுக்கு சமனானது. இலங்கை முஸ்லிம்கள் பெரும்பாலும் தமிழ் நாட்டில் உள்ள மரிக்கார் மற்றும் ராவுத்தர் மக்களிலிருந்து தோன்றியவர்கள் என நம்பப்படுகிறது.

இராவுத்தர் அல்லது ராகுத்தம்மார் என்பவர்கள் தமிழ்நாட்டில் வாழக் கூடிய முஸ்லிம் மக்களில் ஒரு பிரிவினர்ஆவர். இராவுத்தர் என்பதற்கு குதிரைவீரன் என்று பொருள். குதிரை வணிகம் செய்ய வந்த வீரர்கள் "இராவுத்தர்" என்று அழைக்கப்பட்டனர். மரைக்காயர் (மரக்கலம்+ஆயர்) என்றால் கப்பல் மூலம் வணிகம் செய்து வந்தவர்கள் என்று சொல்கிறார்கள். அரபி மொழியில்"ராபித்து" என்றால் "எதிரியை எதிர்க்க சித்தமாக இருப்பவன்" அதாவது போருக்கு சித்தமாக இருப்பவர் என்று பொருள்.

கி.பி பத்தாம் நூற்றாண்டில் சோழ மன்னர்களின் உதவியுடன் செல்யூக் பேரரசை சேர்ந்த துருக்கிய குதிரை வியாபாரிகள் கூட்டம் ஒன்று தமிழ்நாட்டுக்கு வந்து சேர்ந்தது. அவர்களுடன் வந்த இஸ்லாமிய போதனைகுழுக்கள் தமிழ்நாட்டின் தரங்கம்பாடி, நாகபட்டினம், காரைக்கால், தோப்புத்துறை, முத்துப்பேட்டை, அதிராம்பட்டினம், காயல்பட்டினம், கீழக்கரை, கூத்தாநல்லூர் மற்றும் பொதக்குடி ஆகிய ஊர்களில் தங்கி இஸ்லாம் மதத்தை பரப்பினர். பின்னர் தஞ்சாவூர் வந்த இவர்கள், இஸ்லாமிய பிரசாரம் செய்யும் பொருட்டு அங்கேயே தங்கி விட்டனர். இவர்களின் வம்சாவளிகளின் வழித்தோன்றல்களே இராவுத்தர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

இலங்கை முஸ்லிம்களின் தமிழ் பேச்சு வழக்கில் அரபு மொழி சொற்களுக்கு மேலதிகமாக சில குஜராத்தி மொழிச்சொற்களும் காணப்படுகின்றன. சிங்கள மொழியின் செல்வாக்கையும் இவர்களது பேச்சுவழக்கில் அவதானிக்கலாம்.

இலங்கை முஸ்லிம்களின் தமிழ் பேச்சுவழக்கில் உள்ள சில குஜராத்தி மொழி சொற்கள் பின்வருமாறு.

1. வாப்பா = தந்தை
2. காக்கா = அண்ணா (குஜராத்தி மொழியில் காக்கா என்றால் மாமா என்று பொருள்)
3. யாத் = நினைவு
4. சாச்சா = சித்தப்பா
5. பசுந்து = அழகு (குஜராத்தி மொழியில் பசந்த் என்றால் ஆசை அல்லது விருப்பம் என்று பொருள்)
6. நானா = அண்ணா (குஜராத்தி மொழியில் நானா என்றால் மாமா என்று பொருள்)
7. தாத்தா = அக்கா (குஜராத்தி மொழியில் தீதீ என்றால் அக்கா என்று பொருள்)

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரிய தடியால்...

ரவிக்குமார் (வயது-44) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்த வராவார்.

கடந்த 20ஆம் திகதி வீட்டில் படுத்து உறங்கிக் கொண்டிருந்த குறித்த நபரை இனந்தெரியாத ஒருவர் பாரிய தடியால் தலை மற்றும் முகப்பகுதியில் தாக்கியுள்ளார்.

இதில் படுகாயமடைந்த குறித்த நபர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக் காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று முன் தினம் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை தருமபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(ம-7,316)

## விசக்கடிக்கு...

மணற்பகுதி ஆவரங்கால் கிழக்கு பகுதியைச் சேர்ந்த பிரதாபன் சாலமன் (வயது - 22) என்ற இளைஞனே இவ் வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில்,

குறித்த இளைஞன் அண்மையில் விசக்கடிக்கு இலக்காகியுள்ளார்.

இந்நிலையில் மூச்சுவிட சிரமப் பட்ட நிலையில் நேற்று முன்தினம் 25ஆம் திகதி யாழ். போதனா வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந் துள்ளார்.

அவர் நீர் வெறுப்பு நோய்க்கு உள் ளாகி இருந்ததாக தெரிவிக்கப்படு கிறது.

அவரது சடலம் மீதான மரண விசா ரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற் கொண்டார்.

உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப் படைக்கப்பட்டது. (ம-7,33)

## மரணம்...

ஏற்படும் அபாயம் உள்ளதாக சுகாதாரத் தரப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

மிகவும் வறண்ட காலநிலை காரண மாக பாடசாலை விளையாட்டுப் போட்டி கள், வருடாந்த கிரிக்கெட் போட்டிகள் மற்றும் வெளிப்புற விளையாட்டு நட வடிக்கைகளின்போது அதிக தண்ணீர் அல்லது ஏனைய பானங்களை அருந்துமாறு கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் குழந்தை நல மருத்துவர் தீபால் பெரேரா கேட்டுக் கொண்டுள்ளார்.

வயல்வெளிகளில் வேலை செய்ப வர்கள், வீதிகளில் வேலை செய்பவர் கள், இராணுவத்தில் பல்வேறு நட வடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் நீர்ச் சத்து குறைபாட்டினால் பாதிக்கப்படக் கூடியவர்கள் என்பதால் அதிகளவு தண்ணீர் அருந்துவது அவசியம் என வும் அவர் சுட்டிக்காட்டினார்.

வெயில் காலங்களில் வெளியில் இருக்கும்போது வெள்ளை நிற எளிமையான பருத்தி ஆடையை அணிந்து தொப்பி அல்லது வேறு தலையை மறைப்பது முக்கியம் என வும் மது அருந்துவதால் உடல் வெப்ப நிலை அதிகரிக்கும் எனவும் தீபால் பெரேரா தெரிவித்தார்.

மேலும், இந்த நாட்களில் ஒரு நாளைக்கு இரண்டு முறை குளிப்பது மிகவும் பொருத்தமானது என்றும் குழந்தைகளை தண்ணீரில் இருக்க விடுவதும் பயனுள்ளதாக இருக்கும் என்று நிபுணர் கூறினார்.

குழந்தைகளை வாகனங்களில் நிறுத்திவிட்டு வெளியே செல்வதைத் தவிர்க்குமாறும் கடும் வறட்சியான காலநிலையுடன் சரியான காற்றோட் டம் இன்மையினால், வாகனங்களில் வெப்பம் தாக்கி குழந்தைகள் உயிரி ழக்க நேரிடும் என்றும் சுட்டிக்காட்டி னார். (ம-7)

## சுகாதார...

சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள் ளார்.

சம்பவத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் பொருளா ளர் பதவியை வகித்த ரொஷான் குமார (வயது-51) என்பவரே சுட்டுக் கொல்லப் பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இரு வரே துப்பாக்கிச்சூட்டை நடத்திவிட் டுத் தப்பிச் சென்றதாக கூறப்படுகின் றது.

எனினும் துப்பாக்கிச்சூட்டுக்கான காரணம் இதுவரை வெளியாகாத நிலையில் எல்பிட்டிய பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வரு கின்றனர். (ம-7)

## பொலிஸ்மா...

இலங்கையின் 36வது பொலிஸ் மா அதிபராக தேசபந்து தென்னகோன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதன்படி தென்னகோன் 36ஆவது பொலிஸ் மா அதிபராக தனது நிய மனக் கடிதத்தை ஜனாதிபதியின் செய லாளரிடமிருந்து நேற்று திங்கட்கிழமை பெற்றுக்கொண்டார்.

மேலும் அவர் 2023ஆம் ஆண்டு நவம்பர் 29 அன்றிலிருந்து இன்று வரை தற்காலிக பதில் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

## சபாநாயகருக்கு...

நிகழ்நிலை காப்புச் சட்டத்தை நிறை வேற்றும்போது மேற்படி சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய திருத்தப் பரிந்துரைகளை சபாநாயகர் சரியாக அமுல்படுத்தாமை, அரசியல மைப்பு, பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் மற்றும் பாராளுமன்ற சிறப்புரிமைகளை மீறுதல் உள் ளிட்ட பல விடயங் களை அடிப்படை யாகக் கொண்டு சபாநாயகருக்கு எதிராக நம்பிக் கையில்லாப் பிரே ரணையை கொண்டு வருவ தற்கு ஐக்கிய மக் கள் சக்தி நேற்று நடவடிக்கை எடுத் தது.

ஐக்கிய மக் கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணியை பிரதிநிதித்துவப் படுத்தி எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேம தாஸ, பாராளு மன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடா, பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ் மன் கிரியெல்ல, பாராளுமன்ற உறுப்பினர் பேரா சிரியர் ஜி.எல். பீரிஸ், பாராளு மன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்த நாயக்க, பாராளு மன்ற உறுப்பினர் சந்திம வீரக் கொடி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஷான் விஜயலால் டி சில்வா ஆகி யோர் இதில் நேற்று கையெ ழுத்திட்டனர். (ம-7)

## மக்...

உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரி வித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அநுர, ஜனாதிபதி தேர்தல் நடை பெறுமா? இல்லையா? என்பது தொடர் பில் பல கருத்துக்கள் எழுந்தவண் ணமே உள்ளன.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 17ஆம் திகதிக்கு பின்னர் ஒரு நாள் கூட ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாட்டில் ஜனாதிபதியாகப் பதவி வகிக்க முடி யாது.

ஒக்ரோபர் மாதம் 17ஆம் திகதிக்கு முன்னர் அவர் தனது ஜனாதிபதி பதவியை விட்டு 5ஆவது லேனில் உள்ள தனது வீட்டில் இருப்பார் எனக் கூறுகின்றேன்.

"ஏமாற்றப்பட்ட பொதுமக்கள், துன் பங்களுக்கு முகம் கொடுத்துள்ள பொதுமக்கள், எதிர்பார்ப்புக்களை இழந்த இளைஞர்களின் எதிர்காலம், மருந்துகள் இல்லாத நோயாளர்கள் இவ்வாறான ஒரு நாடே தற்போது காணப்படுகிறது. இந்த நாட்டு மக் களை ஏமாற்ற உரிமை இல்லை என்றார். (ம-7)


லக்கி 7 VIP
திகதி 2024.02.26
சீட்டிழுப்பு இலக்கம் 0228
M 0 1 0 7 7 2 M

தன நிதானய
திகதி - 2024.02.26
சீட்டிழுப்பு இலக்கம் - 1432
G 06 38 63 67 G
11791

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3644
சீட்டிழுப்பு திகதி 26.02.2024
V 07 52 56 57
V 72027
தேசிய லொத்தர் சபை

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.02.26
சீட்டிழுப்பு இலக்கம் 0711
ரிஷபம் 12 18 39 49 ரிஷபம்
07250 25

மஹஜன சம்பத
திகதி 2024/02/26
சீட்டிழுப்பு இலக்கம் 5402
G 9 0 3 9 5 7
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 26/02/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1750
Z 22 08 09 42 45
64959

உத்தியோகபூர்வ முடிவுகள்
26.02.2024 வெற்றி வாரம் 110 வர்ணம் ஊதா
E 3 6 5 2 1 7
C
29,889,444.00
DLB
011-2 333 546-47
Web : www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2376 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2024.02.26 தினம் திங்கட்கிழமை
02 07 28 66 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 74,842,707.20

சனிதா
திகதி 2024.02.26 வெற்றி வாரம் 4537
33 41 68 74 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,058,853.60

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4088 வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2024.02.26 தினம் திங்கட்கிழமை
35 39 44 60 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.7,864,128.40

கப்றுக
J 27 06 13 17 73
1552
26.02.2024
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 508,373,114.20

ஜயோதா Jayoda
திகதி 2024.02.26 வெற்றி வாரம் 2003
04 12 48 53 I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,166,402.40

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 2202
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.94,264,950.40
10 47 65 73 O


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (19236)

076 825 7716 (ஆகாஸ்)

## ஜனாதிபதி...

நாடு திரும்பியதும் அரசியல் கூட்டணி தொடர்பில் பேச்சு வார்த்தையில் ஈடுபடுவோம் என முன்னாள் ஜனாதிபதியும், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைவருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் உள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெர முனவின் தலைமை காரியாலயத்தில் கட்சியின் உறுப்பினர்களுடன் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கேள்வி - ரணில் விக்கிரம சிங்க, நாமல் ராஜ பக்ஷ, பஷில் ராஜ பக்ஷ ஆகியோரில் யார் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் ?

பதில் - யாரை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்க வேண்டும் என்பதை கட்சியின் நிறைவேற்று சபையே தீர்மானிக்கும். ரணில் விக்கிரமசிங்க எமது கட்சியின் உறுப்பினரல்ல. எமது கட்சியில் போட்டியிடுவதா. இல்லையா என்பதை அவர் முதலில் தீர்மானிக்க வேண்டும்.

கேள்வி - சபாநாயகருக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியினர் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரவுள்ளனர். ?

பதில் - சபாநாயகரை நாங்கள் பாதுகாப்போம். நம்பிக்கையில்லா பிரேரணையை நிச்சயம் தோற்கடிப்போம் என்றார். (ம-7)

மற்றுமொரு புதிய பஸ் சேவை ஆரம்பித்துள்ளனர்

Village Hotel Jaffna Express

அச்சுவேலி → புன்னாலைக்கட்டுவன் →
உரும்பிராய் → திருநெல்வேலி →
யாழ்ப்பாணம் → கொழும்பு

கட்டணம் - 2700/=

தொடர்புகளுக்கு
077 544 8503 (19118)

மேசன் வேலையாள் தேவை

மேசன், கூலி
வேலையாட்கள் தேவை
இடம் : யாழ்ப்பாணம் (19281)

076 136 6436
076 136 6437

BEACON STUDY CENTRE
வதிரி கரவெட்டி

A/L Day Class

கணித உயிரியல் பிரிவுகள்

ஆரம்பம் :- 01.03.2024 வெள்ளிக்கிழமை
காலை :- 8.00 மணி (Physics)

வழமையான ஆசிரியர்கள்

- நிர்வாகி
(C-8418)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

ICT CLASSES

Tamil & English Medium

Grade: 6,7,8,9 and 10,11

Physical
or
Online Classes

- Theory (ICT Text Book & Work Book)
- Practical on Computer
- Past Papers
- Unit Examination
- Model Papers

Home Visites Individual Classes

Contact : V.V.Moorthy(ICT & IT)
Tel: 0777 469 282 (C-8420)

வீடு வாடகைக்கு உண்டு

கொக்குவில் தாவடிப் பகுதியில்
வீடு வாடகைக்கு உண்டு. (19283)

077 711 0697

கார் வாடகைக்கு




Alto, Renault
கார்கள் வாடகைக்கு உண்டு (19287)

077 332 2433
யாழ்ப்பாணம்

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-8422)

சாரதி தேவை

வான், ஆட்டோ ஓடத்தெரிந்தவராகவும் அலுவலக வேலைகளுக்கு உதவுபவராகவும் இருக்க வேண்டும்.

சம்பளம்: 40'000/-





வயது: 21 முதல் 40 வரை
தொடர்புக்கு:-
0777068777
(C-8422)

# மரண அறிவித்தல்



தோற்றம்
12 - 10 - 1950

மறைவு
24 - 02 - 2024

## கிட்டிணன் தவமணி

கரவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் விக்னேஸ்வரா வீதி கரணவாய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கிட்டிணன் தவமணி அவர்கள் கடந்த சனிக்கிழமை (24.02.2024) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - வைரவி தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான மாணிக்கன் - சீதேவி தம்பதியரின் பாசமிகு மருமகளும் கிட்டிணனின் அன்பு மனைவியும் சுப்பிரமணியன், ஏழுமலை அவர்களின் அன்புச் சகோதரியும் அருந்தவராணி, புனிதமலர், தனலட்சுமி, செல்வராணி, கிருஸ்ணானந்தம், கிருஸ்ணராசா (லண்டன்), தவமலர், வரலட்சுமி, பஸ்தலா, தவயோகம் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் புஸ்பகாந்தன், ஸ்ரீதரன், தவராசா, மகாதேவன், எழில்மலர், ஸ்ரீரஞ்சனா (லண்டன்), சிவகுமார் (அவுஸ்திரேலியா), ஸ்ரீஸ்குமார், பாஸ்கரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (28.02.2024) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று காலை 10.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக வேலுண்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

விக்னேஸ்வரா வீதி,
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்
நந்தன் (மகன்) -077 865 8415
(C-8419)

# 21 ஆம் ஆண்டு நினைவு நாள்



தோற்றம்
30 - 01 - 1939

மறைவு
19 - 02 - 2003

அமரர்

## கார்த்திகேசு சந்திரராசா (SLAS)

[ ஓய்வு பெற்ற பிரதேச செயலர், வலி. மேற்கு சங்கானை
திட்ட இணைப்பாளர் - UNHCR ]

திதி : 27.02.2024

மீளாத் துயிலில் நீங்களோ!
இருபத்தோர் ஆண்டுகளாய் - நாமிங்கு
மீள முடியாமல் தவிக்கின்றோம் அப்பா
மீண்டும் உங்கள் முகம் காண - எங்கள்
மனம் ஏங்கி நிற்குதப்பா ஆவலாய்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"இராஜஸ்தான்"
பறாளாய் வீதி, சுழிபுரம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்
(C-8416)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.02.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org